Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 298 | சனிக்கிழமை | புரட்டாதி 09 ஆம் நாள் 25 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்:16
விலை : ரூ.30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## 82 பேர் சாவு! தொற்று 1,332

கொழும்பு, செப். 25
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 82 பேர்

15

## இனம் காக்கும் பொறுப்பு எங்கள் தோள்களிலேயே!

ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 25
எமது இருப்பை ஒட்டுமொத்தமாகத் துடைத்து அழித்து விடக் கூடிய கடுமையான நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்துநிற்கும் நமது இனத்தை, காக்கவேண்டிய கடமை எமது தோள்களில் இருக்கிறது. அகத்திலும் புலத்திலும் இருக்கும் நம் இனத்தை ஒன்று படுத்தி ஒரு தேசிய இனமாகக் கட்டியமைக்க

15

## யாழ்.பொலிஸாரே தவறிழைத்தனர்

கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 25
நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே நினைவஞ்சலி செய்ய முற்பட்டார். பொலிஸாருக்

15

## பால்மா, சமையல் எரிவாயு உட்பட 4 பொருள்களின் விலை அதிகரிப்பு

திங்கள் இறுதி முடிவு

கொழும்பு, செப். 25
பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் சிமெந்து ஆகியவற்றின் விலைகளை அதிகரிப்பதற்கு வாழ்க்கைச் செலவு தொடர்பான உப குழு பரிந்துரை முன்வைத்துள்ளது. வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுக்கூட்டம்

15

## கொரோனாவால் முல்லையில் ஒருவர் சாவு

முல்லைத்தீவு, செப். 25
கொரோனாத் தொற்றால், முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
கொரோனா நோய் அறிகுறிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காது அன்றையதினமே உயிரிழந்துள்ளார்.
இதேவேளை, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியைச் சேர்ந்த

15

# தமிழர் உரிமைகள் விடயத்தில் தமிழ் எம்.பிக்களிடையே கூட்டு

## அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கி உருவாக்கும் பொது முயற்சி ஆரம்பம்

திருகோணமலை, செப்ரெம்பர் 25
வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இயன்றவரை ஒன்றிணைத்து, ஈழத் தமிழர்கள் கூட்டு உரிமை சார்ந்த நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கி.நோயல் இம்மானுவேல் மற்றும் தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகள் இணைந்து இந்தப் பொதுமுயற்சியை ஆரம்பித்துள்ளனர்.

15

யாழ். வடமராட்சியில்

## மீன் வலையில் சிக்கிய 8 அடி நீள 'கோமராசி'



யாழ்ப்பாணம், செப். 25
யாழ். வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு மீனவர்களின் வலையில், 'கோமராசி' அல்லது 'புள்ளிச் சுறா' என அழைக்கப்படும் மீன் நேற்றுச்சிக்கியது. கட்டைக்காடு பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவரின் வலையில் குறித்த மீன் சிக்கியுள்ளது.
சுமார் 8 அடி நீளம்கொண்ட இந்த மீனை இயந்திரம் மூலம் கரைக்கு மீனவர்கள் கட்டியிழுத்தனர்.

15

சிறையிலிருந்து பரீட்சை எழுதிய

## முன்னாள் போராளிக்கு சிறந்த பெறுபேறு

கொழும்பு, செப். 25
விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவர், சிறைச்சாலையிலிருந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார் என்று சிறைச்சாலைகள்

15

## நாடு மீளத் திறக்கப்படும்போது சுகாதார விதிமுறைகள் என்ன?

கொரோனாச் செயலணி நேற்று ஆராய்வு
வீடுகளுக்கு இலவச ஆயுள்வேத மருந்துப்பெட்டி

கொழும்பு, செப். 25
நாட்டில் நடைமுறையிலிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீக்கி, நாட்டை மீண்டும் திறக்கும்போது பிறப்பிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை, முழுமையானதிட்டமிடலுடன் தயாரிக்க, கொவிட் ஒழிப்புக்கான விசேட செயலணி நேற்றுத்

13

## கிணற்றை இறைக்க வெளிவந்தது குண்டு



யாழ்ப்பாணம், செப். 25
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் கிழக்கு பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து சக்திவாய்ந்த வெடிபொருள் ஒன்று கண்டறியப்பட்டது. தனியார் காணியில்

15

## எரிபொருளை கடனாகத் தருவீர்களா?

பேச்சை ஆரம்பித்தது அரசு

கொழும்பு, செப். 25
எரிபொருள் கொள்வனவுக்கு கடன் பெற்றுக்கொள்வது தொடர்பிலும், எரிபொ

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தரப்பின்றி பேசுவது தற்கொலையே!

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 25

**"மூன்றாம் தரப்பு இல்லாமல் அரசுடன் யாரும் பேச முடியாது. அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேசச் செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு செல்பவர்களை நாங்கள் துரோகிகளாக அறிவிப்போம்" என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

வல்வெட்டித்துறையில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரையாற்றியிருக்கின்றார். இலங்கையில் ஆட்சித்தலைவர்களாக இருப்பவர்கள் சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமாகவே செயற்படுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தநிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச் செயலாளர் பான் கி மூன் இலங்கைக்குவந்து முள்ளிவாய்க்கால் பகுதியை பார்த்த பின்னர் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தார்.

இந்தியாவுக்குப் பலவற்றைச் சொன்னார்கள். ஆனால், இதுவரை எவையும் நிறைவேற்றப்படவில்லை.

13 பிளஸ் என்றார்கள். ஆனால் 13ஆவது திருத்தமே சந்தேகமாக உள்ளது.

குற்றவாளியே எவ்வாறு நீதிபதியை நியமிக்க முடியும்?. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பொறிமுறை ஊடாகவே நீதி கிடைக்கும். அதன்மூலமே வடக்கு கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் நமக்கான பரிகாரம் கிடைக்கும்.

ஒரு நாட்டினுடைய மத்தியஸ்தத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. மூன்றாம் தரப்பு இல்லாமல் யாரும் பேச முடியாது. புலம்பெயர்ந்த அமைப்புகளாக இருக்கட்டும். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கட்டும். சர்வதேச மத்தியஸ்த குழு ஒன்றை வைத்தே அரசுடன் பேசவேண்டும். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறா.

இருக்கின்ற பிரச்சினைகளை நீர்த்துப்போகச் செய்கின்ற நிகழ்ச்சிநிரலே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக நீதி கிடைப்பதற்கான அரசியல் தீர்வை நோக்கி நாம் முன்னகரவேண்டும். உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை புலம்பெயர் தமிழர்களிடமும் தொப்புள் கொடி உறவுகளான தாய்த் தமிழக மக்களிடமும் தாயகத்தில் உள்ள மக்களிடமும் மிகவும் பணிவாகச் சொல்ல விரும்புவது, இந்தச் சந்தர்ப்பத்திலே அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேசச்செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். என்றார். (து-26)

# மாணவருக்கான சுற்றுச்சூழல் உரையாடல்

யாழ்ப்பாணம், செப். 25

பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுச்சூழல்சார் தொடர் உரையாடல்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளன.

சிறகுகள் அமையத்தின் சுற்றுச்சூழல் பிரிவினூடாக, முதலாவது உரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'காலநிலை மாற்றம் என்றால் என்ன?' எனும் தலைப்பில் (Zoom Meeting ID: 859 7865 9145) நடைபெறவுள்ளது.

வளவாளராக காலநிலை மாற்றம் தொடர்பில் தமிழ்நாட்டு ஆய்வாளர் பிரகாஷ் தங்கவேல் இணைந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# புதுக்குடியிருப்பில் நாளை மின்தடை

முல்லைத்தீவு, செப். 25

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேராவில் தொடக்கம் கைவேலி வரையில் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் மாலை 5 மணிவரையில் மின்சாரம் தடைப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

தேராவில் தொடக்கம் கைவேலி வரையான பகுதி மின்சார இணைப்பில் அத்தியாவசியப் பராமரிப்புப்பணி காரணமாக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து-19)

# மிருசுவில் புராணபித்தர் விநாசித்தம்பி காலமானார்



யாழ்ப்பாணம், செப். 25

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த புராணபித்தர் வே. விநாசித்தம்பி நேற்று அதிகாலை காலமானார்.

இயல்பான ஆர்வ மிகுதியால் கந்தபுராணம், ஏகாதசிப் புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய புராணங்களைப் படித்துப் பயன்சொல்லும் பௌராணிகராகத் திகழ்ந்தார்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி உள்ளிட்ட பல கோவில்களில் இவரது புராண படனப் பயன்கூறல் செயற்பாடு நடைபெற்று வந்தது.

கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களுக்கும் (10,345 செய்யுள்களுக்கும்) தானே உரை எழுதி அதனை அச்சேற்ற ஆவலுற்று வழங்கியுள்ளார் என்றும் ஏகாதசி புராணத்துக்கும் உரை எழுதி அதனை அச்சேற்றுமாறு இந்து சமய கலசார அலுவல்கள் திணைக்களத்திடம் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாதமாகச் சுகவீனமுற்றிருந்தநிலையில், அவர் நேற்றுக் காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. (து)

# கொரோனாவால் வவுனியாவில் 4பேர் சாவு

வவுனியா, செப். 25

வவுனியாவில் கொரோனாத்தொற்றால் நேற்று நால்வர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த நபர்களில் இருவர் திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உயிரிழந்தனர். ஏனையவர்கள் சுகவீனம் காரணமாக உயிரிழந்திருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (து-110)

### வவுனியா தெற்கு சபையின்

# உபதவிசாளருக்கு கொரோனாத்தொற்று

வவுனியா, செப். 25

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உபதவிசாளருக்கு கொரோனாத்தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது அமர்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த சபை உறுப்பினர்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பரிசோதனையில் சபையின் உப தவிசாளர் மகேந்திரனுக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவரை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டன.

அதன்பின்னர், சுகாதார விதிமுறைகளுடன் சபை அமர்வு நடைபெற்றது. (து-110,19)

### இணையவழியில்

# 'பஞ்சாங்கங்கள்' பற்றி இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 25

நூலக நிறுவனத்தின் இணையவழி நிகழ்ச்சித் தொடரில் 17 ஆவது நிகழ்வாக 'இலங்கைப் பண்பாட்டில் பஞ்சாங்கங்கள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று இரவு 7.30 மணிக்கு (Zoom Meeting ID: 81415584070) நடைபெறவுள்ளது.

பஞ்சாங்கங்களின் வரலாற்று ரீதியான செல்வாக்கு, விஞ்ஞானமும் பஞ்சாங்கங்களும், சமூக பண்பாட்டியலில் பஞ்சாங்கங்களின் முக்கியத்துவம் போன்றவற்றை பேசுபொருளாக்கொண்டு கலந்துரையாடல் நிகழவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான சர்வேஸ்வரஐயர் பத்மநாபன் கலந்துரையாடலை நிகழ்த்த உள்ளார். நிறுவன ஆளுகைச் சபையின் சார்பில் பிரசாத் சொக்கலிங்கம் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (து).

# செப்ரெம்பர் 11 தாக்குதலை நினைவேந்திய கோத்தாபய



அமெரிக்காவின் வொஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களை இலங்கு வைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களின் 20 வருடப் பூர்த்தியையொட்டி, அமெரிக்காவின் மேன்ஹெடனில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நினைவேந்தல் நிகழ்வில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கலந்துகொண்டார்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதியன்று, நியூயோர்க் நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையம் மற்றும் வொஷிங்டனில் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் ஆகியவற்றை இலக்குவைத்து தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரையொட்டி, ஐக்கிய நாடுகள் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகம் மற்றும் செப்ரெம்பர் 11 நினைவு அருங்காட்சியகம் ஆகியன இணைந்து, இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. (து-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையில் கதைக்காத விடயம் அறிக்கையில் வந்தது எப்படி?

## வலி.மேற்கு பிரதேச சபையில் ஒன்றரை மணிநேரம் அமளி

**யாழ்ப்பாணம், செப். 25**

**சபையில் விவாதிக்கப்படாத விடயம் எவ்வாறு அறிக்கையில் உள்வாங்கப்பட்டது என்று சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியதால் வலிகாமம் மேற்கு பிரதேச சபை அமர்வில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. வலி. மேற்கு பிரதேச சபை அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதேச சபையின் அனுமதி பெறாது மதில் ஒன்று அமைக்கப்பட்டமை தொடர்பான விடயத்திலேயே உறுப்பினர்கள் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தனர்.**

தொல்புரம் பகுதியில் உள்ள காணி ஒன்றில் சபையின் அனுமதி பெறாது அமைக்கப்பட்ட மதில் ஒன்றை இடிக்க வேண்டும் என்று பிரதேச சபையினால் காணி உரிமையாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. ஆயினும் இது தொடர்பாக வீடமைப்பு குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் சபைக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக சபையில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜெயந்தன், இந்த அறிக்கையில் உள்ள விடயம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. சபையில் விவாதிக்காமல் எவ்வாறு அதை அறிக்கையில் உள்ளடக்கினீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

சபைத் தவிசாளரும், செயலாளரும் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. அங்கு கருத்துத் தெரிவித்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஜீவன், அறிக்கையைச் சரிபார்க்காது கையொப்பம் இட்டிருக்கிறீர்களா? சபையில் பேசப்படாத விடயம் எவ்வாறு அறிக்கையில் உள்ளது?.

சபையில் விவாதமோ, பிரேரணையோ கொண்டுவராது காணி உரிமையாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டமை தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த சபைத் தவிசாளர், இது அறிக்கை எழுதும்போது ஏற்பட்ட தவறு. அந்த விடயத்தை அறிக்கையில் இருந்து நீக்குகின்றோம். இது தொடர்பான விடயத்தில் உரிய தரப்பினரை அழைத்து மீண்டும் ஒரு கூட்டம் நடத்தி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த விடயத்துக்காக நேற்று நடந்த அமர்வில் சுமார் ஒன்றரை மணிநேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது தொடர்பில் பல உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர். முக்கியமான பிரச்சினைகள் பல இருக்கும்போது, இவ்வாறு சிறு விடயங்களுக்கு மணித்தியாலக் கணக்கில் விவாதிப்பது பொருத்தமற்றது என்று அவர்கள் தெரிவித்தனர். (எ-319,10)

# வட்டு. பொலிஸ் மீது நம்பிக்கையில்லை


## பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 25

வட்டுக்கோட்டை பொலிஸாரின் மீதிருந்த நம்பிக்கையை மக்கள் இழந்துள்ளனர் என்று நேற்றுமுன்தினம் நடந்த வலிகாமம் மேற்கு பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சபை அமர்வில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் பொன்ராசா இது தொடர்பில் தெரிவித்ததாவது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் மக்கள் வழக்குகளைப் பதிவு செய்யாமல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலேயே தற்சமயம் வலி. மேற்கு பிரதேச மக்கள் முறைப்பாடு வழங்குகின்றனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுக்கப்படும் சந்தேகநபர்கள் ஒரு சில மணித்தியாலங்களில் வெளியே உலாவுகின்றனர். இதனாலேயே மக்களுக்கு பொலிஸார் மீதான நம்பிக்கை குறைந்துள்ளது. என்று சுட்டிக்காட்டினார். (எ-319,10)



# வவுனியாவில் ஊரடங்கை மீறித் திறந்திருந்த வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தலில்

வவுனியா, செப். 25

வவுனியாவில் ஊரடங்கு மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி திறந்திருந்த பிரபல வணிக மையம் உள்ளிட்ட 5 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல வணிக மையம், தர்மலிங்கம் வீதியில் உள்ள இலத்திரனியல் விற்பனை நிலையம், குருமன்காடு பகுதியில் உள்ள வணிக மையம் மற்றும் ஹொரவப் பொத்தானை வீதியில் உள்ள இரு வர்த்தக நிலையங்கள் ஆகியனவே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டன.

கொரோனாத் தொற்று வவுனியாவில் அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சுகாதார அறிவுறுத்தல்களை மீறிய குறித்த வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டன. (ஐ-18)

# இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 25

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் 'பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் மொழி' என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார். ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி. அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# ஒக். 15ஆம் திகதியே நாடு முற்றாகத் திறப்பு

கொழும்பு, செப். 25

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி கடும் கட்டுப்பாடுகள் சகிதம் தளர்த்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது என அறியமுடிகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் நாடு எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது என்றும், இது தொடர்பில் பல தரப்புகளுடனும் சுகாதார அமைச்சு ஆலோசனைகளை பெற்றுவருகின்றது என்றும் தெரியவருகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் முதலாம் திகதி தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்தை ஒக்ரோபர் 15ஆம் திகதியளவிலேயே ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிகழ்வுகளை நடத்துதல் உட்பட இதர விடயங்கள் தொடர்பிலும் 15 ஆம் திகதியளவிலேயே தீர்மானம் எட்டப்படவுள்ளது. (எ-44)

# மின்னல் தாக்கியதில் கட்டடம் சேதம்

கிளிநொச்சி,செப்.25

மின்னல் தாக்கி வேம்பு பிளந்து வீழ்ந்ததில் கட்டடம் ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இரணைமடு நன்னீர் மீனவர் சங்க கட்டடம் முன்பாக இருந்த வேப்பமரத்தை மின்னல் தாக்கியது. இதனால் குறித்த மரம் பிளந்து கட்டடத்தின் மீது வீழ்ந்துள்ளது. இதன்போது குறித்த கட்டடத்தின் கூரை, பகுதியளவில் சேதமடைந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையம் சேத விவரங்களை பதிவுசெய்து வருகின்றது. (ஐ-113)

# 20 -29 வயதுக்கு இடைப்பட்டோரில் 1.04 மில்லியன் பேர் தடுப்பூசி பெற்றனர்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

20 தொடக்கம் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 1.04 மில்லியன் பேருக்கு இதுவரை தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் படுவன் துடாவ தெரிவித்துள்ளார். இதே வேளை, எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளானவர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று பாலியல் நோய் தடுப்புக்கான சிறப்பு மருத்துவ நிபுணர் அஜித் கரவிட்ட தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி. நோயாளர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், சிக்கலான நிலை ஏற்படக்கூடும். எவ்வாறாயினும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படுவதால் பாலியல் சார் தொற்றுநோய்க்கு உள்ளாகிய வர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மணல் ஏற்றிய சாரதிகள் கைது

வவுனியா, செப்.25
முறையான வழி அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 4 டிப்பர் வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.
வவுனியா, ஏ-9 வீதியின் ஊடாக நகரப்பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்கள் வனத்துறை அதிகாரிகளால் கடந்த புதன்கிழமை திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
இதன்போது 4 டிப்பர் வாகனங்கள் முறையான வழி அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது.
இதனையடுத்து குறித்த 4 டிப்பர் வாகனங்களும் வனத்துறை அதிகாரிகளால் கையகப்படுத்தப்பட்டதுடன், அதன் சாரதிகள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.
விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-18)




# கோத்தாபயவுக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்

வொஷிங்டன், செப். 25

**அமெரிக்காவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக போராட்டம் இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் தமிழர்களே நியூயோர்க் நகரில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளை கண்டறியுமாறும், அரசியல் எதிரிகளை அடக்குவதை உடனடியாக நிறுத்துமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

# டெல்டா அடங்கினாலும் மற்றொரு வைரஸ் வரும்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, செப்.25
இலங்கையில் டெல்டா வைரஸின் தாக்கம் குறைவடைந்து வந்தாலும், ஏனைய நாடுகளில் பரவும் கடுமையான பிறழ்வு வைரஸ்கள் எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் பரவக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
இது தொடர்பில், ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவப் பேராசிரியரான சுனத் அகம்பொடி தெரிவிக்கையில்,
தனிமைப்படுத்தல் ஊரடங்கால் பொதுமக்கள் நடமாட்டம் கடுமையாகக் குறைந்துள்ளது. இறப்புகள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
திருமண நிகழ்வுகளை முன்னெடுக்காமை மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவையை இயக்காமை போன்றவற்றால் சிறப்புப் பரப்பிகள் நிறுத்தப்பட்டன.
இலங்கையில் மிகவும் தொற்றக்கூடிய டெல்டா வைரஸின் உச்சம் முடிந்து விட்டது என்று சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர், ஆனால் எதிர்வரும் வாரங்களில் மற்றுமொரு வைரஸ் உச்சம் ஏற்பட 60 வீதம் வாய்ப்பு உள்ளது.
எனவே அனைத்து சுகாதார வழிகாட்டல்களையும் பராமரிக்க மக்கள் வலியுறுத்தப்படுகின்றனர். தடுப்பூசிகள் கொரோனா பரவுவதைத் தடுக்கலாம் என்று மக்கள் அலட்சியப்படுத்தக் கூடாது. -என்றார். (ஒ-4)

# கசிப்புடன் ஒருவர் கைது

தொல்புரம், செப்.25
சட்டவிரோதமான முறையில் உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் தொல்புரம் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வட்டுக்கோட்டை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.
இதன்போது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், சந்தேகநபர் மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-225)

# சாராயம் விற்ற ஒருவர் கைது


கிளிநொச்சி, செப்.25
அனுமதிப்பத்திரம் இன்றி வீட்டில் வைத்து சாராயத்தை விற்பனை செய்த நபரை பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்
சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சின்னத்தாளையடி பகுதியில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் மூலம் உடனடியாக அவரைக் கைது செய்துள்ளனர்.
அந்த நபரிடம் இருந்து 25 கால் போத்தல் சாராயம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபருக்கு பிணை வழங்குவதாகவும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-6-ரி2)

# சுகாதார அலுவலர்களுக்கு பரிசுப் பொதிகள்

கொடிகாமம், செப்.25
கோப்பாய் இடைநிலை சிகிச்சை நிலையத்தில் பணியாற்றுகின்ற 42 சுகாதார அலுவலர்களுக்கு யாழ். போதனா மருத்துவமனையின் ஏற்பாட்டில் எஸ்.வி முருகேசு நிறுவனத்தினராலும் மற்றும் சாந்திகம் நிறுவனத்தினராலும் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.
கொரோனா வைரஸின் தாக்கம் ஏற்பட்ட காலப்பகுதியில் இருந்து கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக சுகாதாரத் துறையினர் தமது பங்களிப்பை செய்துள்ளனர்.
அவர்களின் சேவையைக் கௌரவிப்பதற்காகவே இந்நிகழ்வை ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-159-ரி2)



# கழிவு எண்ணெய் கடத்தல் விசாரணைகள் ஆரம்பம்!



கொழும்பு, செப். 25
கப்பல்களில் இருந்து கழிவு எண்ணெய் கடத்தப்படுகின்றமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணைப் பிரிவால் விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கைக்கு வரும் கப்பல்களில் இருந்து வருடத்துக்கு சராசரியாக 20 ஆயிரம் தொன் கழிவு எண்ணெய் வெளியேற்றப்படுகின்றது. அதில் 4 ஆயிரத்து 800 தொன் கழிவு எண்ணெய் சுத்திகரிக்கப்படுகின்றது. மிகுதி 15 ஆயிரத்து 200 தொன் கழிவு எண்ணெய்க்கு என்ன நேர்கின்றது என்பது மர்மமாகவே உள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் பின்னர் கையளிக்கப்படும் -என்றார். (ம)

# தியவன்னா ஓயாவில் எண்ணெய்ப் படலம்

கொழும்பு, செப். 25
தியவன்னா ஓயாவில் எண்ணெய்ப் படலம் மிதப்பதாக சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
இது தொடர்பாக அமைச்சருக்குத் தகவல் தெரிவித்த நபர், எண்ணெய்ப் படலத்தைக் காட்டும் பல ஒளிப்படங்களையும் வழங்கியிருந்தார் என்று அவர் தெரிவித்துள்ளார்.
இந்த விடயத்தை உடனடியாக விசாரித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்கவை அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கைதிகளுக்கு ஒரு வாரம் விடுமுறை

கொழும்பு, செப். 25

சிறப்பான நடத்தைகளை வெளிக்காட்டும் சிறைச்சாலைக் கைதிகளுக்கு ஒருவாரம் விடுமுறை வழங்குவதற்கான ஆலோசனை மேற்கொள்ளப்படுகின்றது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் கூரையில் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் நலன் தொடர்பில் விசாரணை செய்வதற்கு, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அவர் நேற்றுமுன்தினம் சென்றிருந்தார்.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குதல், நல்ல நடத்தை கொண்ட கைதிகளுக்கான தண்டனையைக் குறைத்தல், அனைத்து கைதிகளுக்கும் ஒரே நடைமுறையைப் பின்பற்றுதல் தொடர்பில் கைதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்வதில் ஏற்படும் தாமதங்கள், மறுவாழ்வு முறையை முறையாகச் செயல்படுத்துதல் மற்றும் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான சிறப்பு விசாரணை அமைப்பை உருவாக்குதல் தொடர்பிலும் கலந்துரையாடினார். அதனடிப்படையில் கைதிகளின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தவும், தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் அறிவுறுத்தினார். (ம-4)

# பேராசை பிடித்தவர்களுடன் இனியும் இணையமாட்டேன்

## சந்திரிகா சீற்றம்



**கொழும்பு, செப். 25**

**பேராசை பிடித்த தலைவர்களால் ஒருபோதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அத்தகைய நபர்களுடன் தொடர்பைப் பேணி எனது நேரத்தை வீணாக்கத் தயாராக இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகப் பதிவில் தெரிவிக்கையில்,

நான் கட்சியை விட்டுச் சென்றதில்லை. இன்னும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புரவலர். கிட்டத்தட்ட 85 வருடங்களாக பிரதிநிதித்துவப் படுத்திய அத்தனகல தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து எனது அப்பா, அம்மா, தம்பி மற்றும் நான் நீக்கப்பட்டோம்.

கட்சியிலிருந்து எந்தச் சட்ட ஒப்புதலும் இல்லாமல் மொட்டுக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்வதை எதிர்த்ததே எங்கள் தவறு. கட்சியைப் பலப்படுத்தி சுதந்திரமாக முன்னேற வேண்டும் என்று நாங்கள் கோரினோம். மொட்டுடன் கூட்டணி வைப்பது எங்கள் கட்சியை அழித்துவிடும் என்றும் வலியுறுத்தினோம். ஆர்வமில்லா தலைவர்கள் கட்சியை விட்டு விலகி, ஊழல் இல்லாத கட்சியை உண்மையாக நேசிக்கும் கொள்கைமிக்க இளைஞர்கள் குழுவிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டும் - என்றார். (ம-4)



உலக உணவுசார்

# இஸ்தான்புல் கண்காட்சியில் இலங்கைப் பொருளுக்கு மவுசு

இஸ்தான்புல், செப். 25

உலக உணவு இஸ்தான்புல் வர்த்தகக் கண்காட்சியில் இலங்கைத் தேயிலை, சுவையூட்டிகள் மற்றும் முந்திரி ஆகியன கவனத்தை ஈர்த்துள்ளன என்று துருக்கிக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு கண்காட்சியில் இலங்கை பங்கேற்பதனை இலங்கைத் தேயிலை சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் இணைந்து தூதரகம் ஏற்பாடு செய்தது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் மூன்று இலங்கை நிறுவனங்கள் பங்கேற்றிருந்தன. (ம)

# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற வாள்வெட்டில் உயிரிழந்த ஜெரன்சினின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் நடைபெற்றது.

குருநகர் பகுதியில் குறித்த குருதிக்கொடை முகாம் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது குறித்த பகுதியில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படலாம் என்ற காரணத்தால் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதிவங்கிப் பிரிவினர் குறித்த பணியில் ஈடுபட்டனர்.

மேலும் எதிர்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வாறான வாள்வெட்டு மற்றும் சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறாமல் பொலிஸார் தமது கடமைகளை சரியான முறையில் செய்யவேண்டும் என்று குருதிக்கொடை முகாமில் கலந்து கொண்ட இளைஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஐ-25)



கொரோனாவிலிருந்து

# மீண்டவர்களுக்கு நரம்பியல் நோய்

கொழும்பு,செப்.25

கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்களுக்கு நரம்பியல் நோய் அறிகுறிகள் உருவாகும் அபாயம் உள்ளது என்று நரம்பியல் நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் காமினி பத்திரண தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்கள் நரம்பியல் நோய் அறிகுறிகள் கடுமையாக இருந்தால் மருத்துவரை நாடுவது மிகவும் முக்கியம்.பெல்ஸ் ஃபால்ஸ் என்ற நோயின் அறிகுறியாக முகத்தின் ஒரு பக்கம் உணர்ச்சியற்றதாக மாறும். கொரோனாத் தொற்றுக் காரணமாக இது ஏற்படுகின்றதா என்று சந்தேகம் எழுந்துள்ளது. கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களில் 3 வீதம் முதல் 40 வீதம் வரை நரம்பியல் நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்த 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 180 குடும்பங்களுக்கும் லைக்கா ஞானம் அறக்கட்டளையினால் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. குறித்த உலர் உணவுப்பொதிகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி2,6)

# கப்ராலுக்கு எதிராக இரண்டு மனுக்கள்!

கொழும்பு, செப். 25

மத்திய வங்கியின் புதிய ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால் இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். அவரைப் பதவிக்கு நியமித்தமையை சவாலுக்கு உட்படுத்தியும், பதவியிலிருந்து உடனடியாக நீக்குமாறும் வலியுறுத்தி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ம-4)

# நாடாளுமன்ற அமர்வில் நாட்டமில்லாத எம்.பிக்கள்

கொழும்பு, செப். 25

நாடாளுமன்ற அமர்வுகளில் குறைந்த நாள்கள் கலந்து கொண்ட உறுப்பினர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்ட கணிப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.

இரா.சம்பந்தன், பிள்ளையான், ஜீவன் தொண்டமான், வினோநோகராதலிங்கம், திகாம்பரம், சித்தார்த்தன், ஹலீம் மற்றும் விஜயதாஸ ராஜபக்ச, டிரான் அலஸ், விமல் வீரவன்ச, மஹிந்த சமரசிங்க, திலும் அமுனுகம உள்ளிட்டவர்கள் குறைந்த நாள்களே அமர்வில் பங்கேற்றுள்ளனர்.

அதேபோன்று நாடாளுமன்றச் செயற்பாடுகளில் பலவீனமான உறுப்பினர்களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. டிரான் அலஸ், அலி சப்ரி ரஹீம், மர்ஜான் பலீல், நிப்புண ரணவக்க, இரா.சம்பந்தன், குலசிங்கம் திலீபன், சாரதி துஸ்மந்த, உதயகாந்த குணதிலக்க, எம்.எஸ்.தௌபிக், அப்துல் ஹலீம் ஆகியோர் அந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுக்கடைகளை திறக்க பஸிலே அனுமதித்தார்

அசோக அபயசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, செப். 25**

**மதுபானசாலைகளைத் திறப்பதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே அனுமதி வழங்கினார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபயசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகளின் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாவை 2 ஆயிரம் ரூபாவாகக் குறைத்து அந்தத் தொகையும் இப்போது வழங்கப்படுவதில்லை. மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அமைச்சர்களின் தேவைக்கேற்ப நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு நாடு ஒரு சட்டமாகச் செயற்பட வேண்டும். ஆனால் நாட்டின் சொத்துக்களை விற்கமாட்டோம் என்று தெரிவித்தனர். தற்போது என்ன நடந்துள்ளது?

நாட்டு மக்கள் மூன்று நேர வேளை உணவை உண்ணாமல் இரண்டு நேரம் மாத்திரம்தான் உணவை உட்கொள்கின்றார்கள். நாட்டில் நிதிப்பற்றாக்குறை நிலவுவதால் செலவினங்களைக் குறைக்கு மாறு நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

2 ஆயிரம் ரூபா மற்றும் 5 ஆயிரம் ரூபா கொடுத்து மதுபானப் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசையில் நிற்கின்றார்கள் என்று அரசின் அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர்.

மதுபானசாலையைத் திறப்பதற்கு நாங்கள் அனுமதி வழங்கவில்லை, எங்களுக்குத் தெரியாது என்று மதுவரித் திணைக்களம் மற்றும் நுகர்வோர் அதிகார சபை என்பன கூறியுள்ளன. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே மதுபானசாலையைத் திறக்க அனுமதி வழங்கினார் - என்றார். (ஒ-4-ரி1)

## பணவீக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது

விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.25

பணம் அச்சிடுதல் மற்றும் பிற வழிமுறைகள் இருந்தபோதிலும் நாட்டில் பணவீக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் அண்மையில் பதவியேற்ற போது 13 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டதுடன், அண்மைக் காலத்தில் மட்டும் 23 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டுள்ளது.பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக அரசாங்கம் பணத்தை அச்சிடுவதில் ஈடுபட்டிருந்தாலும், அதிகரித்த தேவைக்கு விநியோகம் இல்லாததால் பணவீக்கம் அதிகரிக்கிறது.

பணவீக்கம் 6.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பணம் அச்சிடுதல், கடன் பெறுதல், தேசிய சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்துதல் ஆகியவையே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. நிலவும் நெருக்கடியை அரசாங்கம் தீர்க்கவில்லை - என்றார். (ஐ-இ)



## விவசாயிகளை ஏமாற்றாதீர்!

தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 25

விவசாயிகளை இனியும் ஏமாற்றாமல் தெளிவான கொள்கையை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவிக்கையில்,

நைட்ரஜன் இரசாயன உரம் மற்றும் பொஸ்பேட் இறக்குமதிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு நிதி அமைச்சு மற்றுமொரு அறிவிப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

விவசாயிகளை தவறாக வழிநடத்தாதீர்கள். அவர்களை ஏமாற்றி பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது.

17 வீத நைட்ரஜனுடன் கிருமி நீக்கம் செய்யப்பட்ட இயற்கை உரங்களை இறக்குமதி செய்வதாகக் கூறினாலும், சீனாவிலிருந்து நகர்ப்புறக் கழிவுகளை இறக்குமதி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை உரத்தின் மாதிரியில் எர்வினியா நோய்க்கிருமி இருப்பது தெரியவந்துள்ளது.

மேலும் இது பெரும்பாலான காய்கறி சாகுபடி மற்றும் குறிப்பாக உருளைக் கிழங்கு சாகுபடிக்கு தீங்கு விளைவிக்கும் - என்றார். (ஒ-4-ரி1)



## முறிகண்டி காட்டுப்பகுதியில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்ட சிறுத்தை

முல்லைத்தீவு, செப்.25

முல்லைத்தீவு முறிகண்டி காட்டுப்பகுதியில் மிருகங்களுக்கு வைக்கப்பட்ட தடத்தில் அகப்பட்ட நிலையில் சிறுத்தை ஒன்று கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளது.

மிருக வேட்டைக்காக வைக்கப்பட்ட தடத்தில் அகப்பட்ட நிலையிலேயே குறித்த சிறுத்தை மீட்கப்பட்டது.

வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர் பி.கிரிதரன் தலைமையிலான வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மயக்க ஊசி செலுத்தி சிறுத்தையை மீட்டனர்.

குறித்த சிறுத்தையை வில்பத்து காட்டுக்குள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-214)

## அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களும் தடுப்பூசி ஏற்றிக்கொள்வது கட்டாயம்

குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவிப்பு



இலங்கை, செப்.25

இதுவரை தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாத கர்ப்பிணித் தாய்மார் தமது பிரதேச குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'இலங்கையில் தடுப்பூசி ஏற்றலின் தற்போதைய நிலை' தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தெற்காசிய நாடுகளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி ஏற்றிய முதலாவது நாடாக இலங்கை மாறியுள்ளது.

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு முறையின் கீழ் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

தடுப்பு ஊசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் 13 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இது மொத்த சனத்தொகையில் 63 வீதமாகும். இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தை தாண்டி உள்ளது - என்றார். (ஐ-இ)

# தடுப்பூசி ஏற்றிக்கொள்ளத் தயங்கும் இளைஞர்களால் நாட்டுக்கு ஆபத்து

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு,செப்.25

தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கு இளைஞர்கள் தயங்குவது நாட்டை ஆபத்துக்குள்ளாக்கும் செயல் என்று அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தடுப்பூசி நிலையங்களுக்கு வரும் இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் காரணமாக சமூகத்தில் வைரஸ் தொற்று அதிகரிக்கும் ஆபத்துள்ளது.

இதனால் இளைஞர்களின் சமூகத்தில் வைரஸ் சுமைகள் அதிகரிக்கப்படலாம்.

இதனால் சமூகத்தில் புதியமாறுபாடுகள் உருவாகலாம். அவ்வாறான சூழ்நிலையில் மாற்றமடைந்த வைரஸ் சமூகத்துக்குள் இருந்து உருவாக கூடும். தடுப்பூசிகளால் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படலாம். இதன் காரணமாகவே வைரஸ் சுமைகளை குறைப்



பதற்கு தடுப்பூசியை செலுத்தவேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்துள்ளது-என்றார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## துட்சிகளும் தமிழரும் பிரான்ஸும் ஐ.நா.வும்

ருவாண்டாவில் துட்சிகள் படுகொலை செய்யப்பட்டதில் பிரான்ஸுக்கு என்ன வகிபங்கு இருந்ததோ, என்ன காரணத்துக்காக பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன் உலக மக்கள் முன்னிலையில் ருவாண்டாப் படுகொலைக்காக வருத்தத்தைத் தெரிவித்தாரோ அதேபோன்றதொரு நிலை ஐக்கிய நாடுகள் சபைக்கு விரைவில் ஏற்பட்டால் அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை என்றோவொருநாள் தன் கையாலாகாத் தனத்தை ஏற்றுக்கொள்ளத்தான் போகின்றது- வருந்தத்தான் போகின்றது- மன்னிப்புக்கேட்கத்தான் போகின்றது.


1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் எட்டு லட்சம் துட்சிகள் ருவாண்டாவில் ஹூட்டுக்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளை ஹூட்டுக்கள் புரிவதற்கு பிரான்ஸ்தான் முக்கிய காரணமாகச் சொல்லப்பட்டது. அப்படியென்றால் பிரான்ஸ்தான் துட்சிகளைக் கொன்றதா?. இல்லவேயில்லை. ஹூட்டுக்களின் வெறியாட்டத்தைக் கண்டு கொள்ளாமல் பிரான்ஸ் இருந்தது. ஹூட்டு ஆட்சியாளர்களை கண்மூடித்தனமாக நம்பியது. இந்தக் கள்ளமௌனம்தான் காலப்போக்கில் துட்சிகளின் படுகொலையில் ஹூட்டுக்களின்மீது எந்தளவு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதோ அதேயளவு குற்றச்சாட்டு பிரான்ஸ் மீதும் முன்வைக்கப்படுவதற்குக் காரணமானது. நீதி நிலைநாட்டப்படுவதற்கு எதிராகக் காக்கப்படும் கள்ளமௌனம்கூட அநீதிதானே. இந்த ஒரே விடயத்துக்காகத்தான் ஆபிரிக்கத் தேசத்தில் தலைகுனிந்து அண்மையில் தன் வருத்தத்தைத் தெரிவித்தார் பிரெஞ் அதிபர் இம்மனுவல் மக்ரோன்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத்தொடரில் பங்கெடுக்கச் சென்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிலபல வாக்குறுதிகளை சர்வதேசத்துக்கு வழங்கியிருந்தார். புலிகளுடன் தொடர்புடைய நபர்கள் நீதிமன்றப் பொறிமுறைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதில் தனக்குப் பிரச்சினையில்லை, புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு நடத்தத் தயார் என்றெல்லாம் அவர் தெரிவித்திருந்தார். ஆக, தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதயசுத்தியுடன் தயாராக இருப்பதுபோன்று அமைந்தது அவரின் பேச்சு. ஐக்கிய நாடுகள் சபையும் வழமைபோல் இதை நம்பி நற்சான்றுப் பத்திரம், பாராட்டுப் பத்திரம் எல்லாம் கொடுத்தனுப்பியுள்ளது.

ஆனால், இவ்வாறு சர்வதேசத்துக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கும் நேசக்கரம் நீட்டிவிட்டு ஜனாதிபதி நாடு திரும்ப முன்னரேயே, அவருக்குப் பரிச்சயமான, பிடித்த பாணியிலான காட்சியொன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. திலீபனை நினைவேந்துவதற்காகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தரதரவென இழுத்துச் செல்லப்பட்டு வாகனத்தில் ஏற்றப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நிலையா என்பதை இங்கு ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

திலீபன் ஓர் அகிம்சைவாதி. ஆயுத கலாசாரத்தைப் புறக்கணித்து இந்தியாவிடம் ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவையும் தண்ணீரையும் தவிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்துறந்த ஒருவர். காந்திய தேசத்துக்கே அகிம்சையைக் கற்றுக்கொடுத்தவர். அவரின் நினைவேந்தலுக்குத்தான் தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல வெடுக்குநாறி மலையில் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியமையும் இங்கே கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது. இதே காட்சிகளை அரங்கேற்றிய அரசு அடுத்த அமர்வில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றோம், இழப்பீட்டுப் பொறிமுறையை உருவாக்குகின்றோம், காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகத்தை அமைக்கின்றோம் என்றெல்லாம் கதை விடத்தான் போகின்றது, சர்வதேசமும் அதற்கு பக்கப்பல்லவி பாடி வழியனுப்பி வைக்கத்தான் போகின்றது.

காலம் கடந்த பின்னர் பிரான்ஸுக்குப் பிறந்த ஞானம் போன்று ஐ.நாவுக்கும் நாளை ஞானம் பிறக்கலாம். ஆனால், ஒன்றை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும். பிரான்ஸை துட்சிகளின் ஆன்மாக்கள் மன்னித்தனவா என்றால் இன்றுவரைக்கும் பதில் இல்லை.




### இராணுவத்தால் வளைவு அமைக்கப்படும் விவகாரம்

# மக்கள் கருத்தறிந்துதான் இறுதி முடிவெடுக்கப்படும்

### கரைச்சி பிரதேசசபை அமர்வில் தீர்மானம்

**கிளிநொச்சி, செப். 25**

**கிரணைமடுப் பகுதியில் இராணுவத்தால் அமைக்கப்படும் வளைவுக்கான அனுமதி தொடர்பில் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டட பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கரைச்சி பிரதேச சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்குரிய இரணைமடுப் பகுதியில் இராணுவத்தினரால் வீதி வளைவு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதனை உடனடியாக நிறுத்துமாறும் இல்லையேல் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரால் ஊடக சந்திப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வளைவை அமைக்கும் இராணுவத்தினர் தமக்கு அனுமதி அளிக்குமாறுகோரி பிரதேச சபையினரிடம் விண்ணப்பித்திருந்தனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேசசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது விவாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து பொலிஸார் ஆகியோர் இங்கு வீதி வளைவை அமைக்கலாம் என்று அனுமதி வழங்கியுள்ள நிலையில் பிரதேசசபையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. எனவே மக்களின் கருத்தறிந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# தேர்தல் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25

தற்போதைய அரசாங்கம் தேர்தல் பரப்புரையின்போது வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் கொள்கைகளை முற்றிலும் புறக்கணித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கெரவலப்பிட்டிய மின் நிலையம் மற்றும் பிற சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் முயற்சிகளின் மூலம் அரசாங்கம் தன்னிச்சையான முடிவுகளை எடுத்துள்ளது.

2035ஆம் ஆண்டுக்குள் கெரவலப்பிட்டிய மின்நிலையம் முழுமையாக இலங்கை மின்சார சபைக்கு சொந்தமானதாக இருந்தாலும், அதை ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. எரிவாயு வழங்கும் திட்டமும் அதே நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு முக்கிய அரச சொத்தை ஒரு வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்குவது நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றார். (ஐ-இ)

## இலங்கை செல்வோருக்கு பிரிட்டன் எச்சரிக்கை

இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று பிரிட்டன் அரசு எச்சரித்துள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்று நீடிக்கின்றமை, தனிமைப்படுத்தல் சட்டம் மற்றும் பயணத்தடை ஆகியன நடைமுறையில் இருப்பதன் அடிப்படையில் பிரிட்டன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. பயணத்தடைக்கான சிவப்புப் பட்டியலிலிருந்து இலங்கையை பிரிட்டன் அண்மையில் நீக்கியிருந்தது. அதனடிப்படையில் இலங்கைக்கு அத்தியாவசியமான பயணங்களை மாத்திரம் மேற்கொள்ளுமாறும் தமது பிரஜைகளுக்கு பிரிட்டன் அறிவுறுத்தியுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.25
2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகின. எமக்குக் கிடைக்கப்பெற்ற பாடசாலை ரீதியான சிறப்பான பெறுபேறுகள் வருமாறு:

### யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

ஜெ.சாரங்கன் -9ஏ, என்.விபூசன் - 9ஏ, என்.பிருந்தாபன் - 9ஏ,ஆர்.கேசவன் - 9ஏ, எஸ்.நிதுஜன் - 9ஏ, யு.அஸ்வினி - 9ஏ, என்.பிரணவி-9ஏ, எ.ரக்சிகா - 9ஏ , கே.யன்சியா - 9ஏ, ஆர்.அஜந்தன் - 8ஏபி, ஆர்.பிரியராம் - 8ஏபி, எஸ்.அனுசிகா - 8ஏபி, ரி.பாலகீர்த்தனா - 8ஏபி, யு.கஜிதா - 8ஏபி, கே.பமித்திரா - 8ஏபி, எஸ்.சாருஜா - 8ஏபி, எஸ்.துவாரகி - 8ஏபி, ஜெ.லக்ஸ்மன்- 8ஏசி, எஸ்.தனுஸ்ராஜ் - 8ஏசி, என்.லக்சன்-8ஏ, கே.தர்மிகா - 8ஏ, பி.செமிலோன் -7ஏ2பி, எம்.சாய்னேஸ் -7ஏ2பி, ஏ.சங்கவி-7ஏ2பி, ரி.காருண்யா - 7ஏ2பி, என்.நிதுசா - 7ஏ2பி, ஆர்.கஜானி-7ஏபிசி, டி.ஜெயந்தா - 7ஏபி, என்.கஜேந்தினி-7ஏபி, எஸ்.டிசாந்தன் - 7ஏ2சி, வி.அனோசன் -7ஏ2சி, ஆர்.எழிலரசி-7ஏசி, பி.திலக்சன் 6ஏ2பிசி, ஆர்.சரன் 6ஏ2பிசி, வி.ராகவி - 6ஏ2பிசி, எஸ்.அனோஜன் - 6ஏ2பிஎஸ், ரி.திரிசா 6-ஏ2பிஎஸ், ஆர்.அருள்ராஜ் - 6ஏ2பி, ஜி.வைஸ்ணவி - 6ஏ2பி, எஸ்.திவ்யா - 6ஏபி2சி, எஸ்.ஆதிரை - 6ஏபிசி, எஸ்.தஸ்மினா - 6ஏபிசி, என்.சகானன் - 6ஏ3எஸ், ஆர்.தனுசன் - 5ஏ4பி, எஸ்.ஜெகஜீவன் - 5ஏ4பி, பி.நைனீகா - 5ஏ4பி, ஆர்.சேயோன் - 5ஏ3பிசி, எ.ரிசாந்தி - 5ஏ3பிசி, எஸ்.சிந்துஜன் - 5ஏ3பி,என்.தீபநேசன்- 5ஏ2பிசிஎஸ், ஐ.யதுர்சன் - 5ஏ2பிசி, பி.தபின்சன்-5ஏ2பிசி, பி.வைஷாலினி - 5ஏ2பிசி, எஸ்.வேந்திகா- 5ஏபி2சி, எஸ்.யதுர்சன் - 5ஏபிசிஎஸ், ரி.டினேஸ் -5ஏபி3எஸ், பி.மகிசா - 4ஏ5பி,வி.அபினயா - 4ஏ4பிசி,ஆர்.சரணிகா - 4ஏ4பி,எஸ்.கயானன் -4ஏ3பிசிஎஸ், எஸ்.சுலக்சிகா - 4ஏ3பிசிஎஸ்,எஸ்.ஜெசினா - 4ஏ3பிசிஎஸ், ஆர்.லக்கீர்த்தா - 4ஏ3பிசி, ஆர்.நிஷாந் - 4ஏ3பிசி, எஸ்.ராகவி -4ஏ2பி2சிஎஸ், ஜெ.தர்சன்- 4ஏ2பி2சிஎஸ், எஸ்.லதுஜன் - 4ஏபி3சிஎஸ்,ரி.சகாணா - 4ஏபி3சி,எஸ்.டினித்தன் - 4ஏபி2சி2எஸ்.

### வவுனியா ஸ்ரீ நாகராஜா வித்தியாலயம்

அ.தர்சிகா-8ஏ,யோ.கோகிலா- 7ஏபி,யோ.நிரோசா-7ஏபி, சி.டேன்சிகா -5ஏ2பிசி, யோ.கிஷா - 5ஏ3சி, நா.கோபிகா-4ஏ4பி,நா.அபிசா - 3ஏ3பிசிஎஸ்.

### யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை

அ.சாருணி - 7ஏபி, சு.அபிநயா - 2ஏபி4சி, அ.அபினா - 5ஏ3பி, அ.டில்றுக்சன் - 2ஏ3பி2சி, செ.சுஜீவன் - ஏ2பி2சி2எஸ்,ச.கௌரீசன் - ஏ2பி3சி2எஸ், க.உஷாந்தன் - 3பி2சி2எஸ், ஸ்ரீ.தர்சனன் - பி4சிஎஸ்.

### யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

பி.பிரவீன் - 9 ஏ, எஸ்.நர்த்தனன்- 9ஏ, கே.ஜிஸ்னுகா - 9ஏ,பி.டீபிகா - 8ஏபி, என்.டினுஷன் - 8ஏ, பி.சத்யகரன் - 8ஏ, ரி.பிரியந்தினி 8ஏ,சி.சுலோசனா - 7ஏ2பி, ரி.டானியல் ஜனுதாஸ் - 7ஏபி, ஜி.பிரியங்கி - 7ஏபி, பி.பிருந்தன் - 6ஏபிசி, ஜி.ஹரிஸ்டன் - 6ஏபிசி, வி.விதுர்ஷன் 6ஏபிசி,பி.சங்கவன் - 6ஏ2சி,எம்.ராகவி - 5ஏ4பி, எஸ்.சஹீனா - 5ஏ4பி, பி.சாம்சன் - 5ஏ3பி, எஸ்.தமிழினி - 5ஏ3பி,ஆர்.டிலக் ஷனா - 5ஏ2பி2சி, வி.திலக்ஷிகா - 5ஏ2பி2சி, எஸ்.துஷிந்தி - 5ஏ2பிசி, எஸ்.வேணுஜா - 5ஏபி, ஐ.மரியதர்சிகா - 4ஏ4பி.

### யா/மகாஜனக் கல்லூரி

சி.கபிசன் - 9ஏ,சி, சிவானுஜன் - 9ஏ, சி.ஜனுசிகன்- 8ஏ,செ.டிலக்சிகா - 8ஏ,சி.கேசி - 8ஏ,ப.மதுரங்கா- 8ஏ,சி.கயாத்திரி - 8ஏ,உ.கிபிசா - 8ஏ,கு.துஷானா- 8ஏ,சி.அருன்சாந் - 7ஏ,ஆ.லக்சியா - 7ஏ,ச.சரூபினி- 7ஏ,க.ரிலக்ஸன் - 6ஏ, சி.சரூபன் - 6ஏ,இ.சோபிகன்- 6ஏ,வி.துசன்ஜா - 6ஏ,கு.வினுசன் - 5ஏ,ச.கம்சிகா5ஏ,இ.தனுஷ்கரன் - 5ஏபி.பெனிற்ரா - 5ஏ,அ.அபிநயன் - 4ஏ,இ.துஷானன் - 4ஏ,கி.வசீகரன்4ஏ,உ.லக்சி - 4ஏ,சி.அபிஷாந் - 4ஏ,க.மதுசிகா - 4ஏ, சு.அபிநயா - 4ஏ,லி.நிஷாந்தி - 4ஏ,சி.துசானி - 4ஏ.

### கிளிநொச்சி இந்துக் கல்லூரி

யூ.வானதர்சன் -9ஏ,ர.துவாரகன் -9ஏ, ரா.டதுர்சன் - 8ஏசி, வி.சாதுயனபிரியன் - 6ஏ2பிசி,கே.கலையரசி - 5ஏ4பி, அ.திருத்தமிழ் 5ஏ2பி2சி.

### யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**ஆங்கில மூலம்**

பி.அபினயா - 9ஏ, எஸ்.அனுசா - 9ஏ, ஆர்.அஸ்வியா - 9ஏ,வி.கர்சினி - 9ஏ, ஆர்.ஐயலினி - 9ஏ,ஏ.ஜொயிஸ் நிக்யுலா டெனால்ட் - 9ஏ, யு.கபிஸ்கா - 9ஏ, இ.கவிதாஞ்சலி - 9ஏ, பி.கிசாலினி- 9ஏ, எஸ்.கோவர்த்தனி - 9ஏ, எஸ்.லதாங்கி - 9ஏ, எஸ்.மாதுமை - 9ஏ, என்.சுமித்திரா - 9ஏ, வி.சுவேத்தா - 9ஏ, கே.சுவஸ்திகா - 9ஏ, வி.தக்ஸிதா - 9ஏ, ஜெ.தனோஜா - 9ஏ,ரி.தரங்கினி - 9ஏ, எஸ்.தர்சிகா - 9ஏ, எம்.வைஸ்ணவி - 9ஏ,ஆர்.பிரவினா - 8ஏ, கே.லோஜிகா - 8ஏபி, ஆர்.யசோதா - 8ஏபி, ஆர்.லக்ஸிகா - 6ஏ3பி, ரி.ரம்மியா - 6ஏ3பி, பி.சகானா - 6ஏ2பி, ஜே.வைஸ்ணவி - 6ஏபிசி, எஸ்.அட்சயா - 5ஏ4பி, எஸ்.சிவானி - 5ஏ2பி2சி.

**தமிழ் மூலம்**

பி.பானுஜா - 9ஏ,ரி.அஸ்வினி - 9ஏ, ஜெ.கஜாலினி- 9ஏ, ஆர்.நிலாவிழி - 9ஏ, எ.றொசானி - 9ஏ, ஆர்.செந்தூரி - 9ஏ, ஜெ.சர்மினி - 9ஏ, எ.தயாளினி- 9ஏ, எஸ்.வினுஜா - 9ஏ, எஸ்.வைஸ்ணவி - 8ஏ, எஸ்.அபினா8ஏபி, ஐ.எழிலினி - 8ஏபி, எஸ்.கஜேந்தினி - 8ஏபி, எஸ்.மோகனரூபி - 8ஏபி,எஸ்.அருண்யா - 8ஏசி,எம்.கம்சா - 7ஏபி, கே.கவிதாரணி - 7ஏசி, ஏ.கம்சத்வணி - 7ஏ2பி, ஜெ.ராகவிகா - 7ஏ2பி, ஐ.சௌமியா - 7ஏ2பி,பி.ஆதிகா - 7ஏபிசி, ஆர்.பிரபினா - 7ஏபிசி, எம்.பவ்யா - 6ஏ3பி, எஸ்.சுரேந்தினி - 6ஏ2பி, பி.கஜலக்சி - 6ஏபி2சி, ரி.திசா - 6ஏபி2சி, எஸ்.ரிசாந்தி- 6ஏபிசி, எ.அபர்ணா - 6ஏ2சிஎஸ், ஜெ.அவிசா- 6ஏ2சிஎஸ், எம்.ரம்யா - 5ஏ4பி, ஆர்.அர்ச்சனா- 5ஏ3பிசி,யு.சஞ்சினி- 5ஏ3பிசி,எஸ்.மதுசனா- 5ஏ3பிஎஸ், கே.நிருபா - 5ஏ2பி2சி,கே.சாமந்தி - 5ஏ2பி2சி,ஜெ.கஜந்திகா - 5ஏ2பிசி, சி.அபிசிகா 5ஏபி3சி, ஆர்.திவ்யா - 5ஏபி3சி.

## வாழ்வக மாணவர்களுக்கு சிறப்பான பெறுபேறு!

சுன்னாகத்தில் உள்ள விழிப்புலனிழந்தோர் வாழ்வகத்தில் தங்கியிருந்து கல்வி பயிலும் மூன்று மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.
சுன்னாகம் யா/இராமநாதன் கல்லூரியில் பயிலும் வாழ்வக மாணவி சிவசக்தி லக்சிகா சங்கீத பாடம் நீங்கலாக - 5ஏ, 2சி, எஸ் என்ற பெறுபேற்றைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.மற்றுமொரு மாணவியான வெற்றிவேல் ஜனுபா சங்கீத பாடம் நீங்கலாக - பி, 4சி, எஸ் என்ற பெறுபேற்றையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பயிலும் வாழ்வக மாணவன் நவனீதன் கௌதமன் - ஏ, 3பி, 2சி, 2எஸ் பெறு பேற்றையும் பெற்றுள்ளனர். (ஈ-இ)

# சர்வதேசத்துக்கு பதிலளிக்க கைதிகளை விடுவியுங்கள்

## மனோ வலியுறுத்து



**கொழும்பு,செப்.25**


**சர்வதேசத்தில் ஏற்படும் நெருக்கடிகளுக்குப் பதிலளிக்க வேண்டுமானால் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அநுராதபுரம் சிறையில் அண்மையில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சம்பவத்தால் சர்வதேசத்தில் இலங்கைக்கு நெருக்கடிகள் ஏற்படலாம். இது தொடர்பில் தகுந்த பதிலை அளிக்க அரசு தயாராக வேண்டும்.
சிறைகளில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு நியமிக்கப்பட்டுள்ள குழு ஊடாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பரிந்துரைக்கவேண்டும்.
1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கொலையைப் போன்றே, அநுராதபுரம் சிறையிலும் இடம்பெற வாய்ப்பிருந்தது.
இராஜாங்க அமைச்சர் அநுராதபுரம் சிறைக்குள் சென்று தமிழ் அரசியல் கைதிகள் மீது துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார். அது முற்றிலும் பிழை.
இந்தச் சம்பவத்தை இனவாதமாக்க தமிழ் உறுப்பினர்கள் முற்படுகின்றனர் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.
ஆனால் இது இனவாத நடவடிக்கையல்ல - என்றார். (ம-4)

## துப்பாக்கி வெடித்து இருவர் உயிரிழப்பு

மிருக வேட்டைக்காகப் பயன்படுத்தப்படும் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில், இருவர் உயிரிழந்துள்ளதுடன் இன்னொருவர் காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் திருப்பன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரியாகல்லப் பகுதியில் நேற்றுமுன்திணம் மாலை நடந்துள்ளது.
மூவர் குறித்த பகுதியால் நடந்து சென்றபோது கட்டுத்துப்பாக்கி வெடித்து இருவர் படுகாயமடைந்தனர். இதனைக்கண்டு ஓடிச்சென்ற மூன்றாவது நபரும் படுகாயங்களுக்கு இலக்கானார். அவர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**சிம்மம்:** இன்று எதிலும் நிதானத்துடன் செயல்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளில் கவனம் தேவை. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

# ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அமைச்சரவை மீண்டும் மாற்றம்

## வீரசேகரவின் பதவிக்கு ஆபத்து

**கொழும்பு, செப். 25**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அமைச்சரவை விரைவில் மறுசீரமைக்கப்படவுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடு திரும்பியபின்னர் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்பட்டு, அமைச்சர்களுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளியிட்டிருந்தாலும் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனத் தெரியவருகின்றது. முக்கியமான சில அமைச்சுப் பதவிகள் மாறவுள்ளதுடன், சிலரின் அமைச்சுப் பதவிகள் கைமாறவுள்ளன. பிரதானமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பதவியில் இருந்து சரத் வீரசேகர நீக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (எ-44)

## ஆசிரியர் விவகாரத்தை மறைக்கவே பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டம்

### ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25




அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தெளிவான முடிவை அறிவிக்காமல் பாடசாலைகளை ஆரம்பிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

எங்கள் போராட்டத்தை அரசு நீடிக்க விட்டால், மாணவர்களுக்கான ஒன்லைன் கல்வி மட்டுமே கிடைக்கும். எமக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு, தற்போது பாடசாலைகள் தொடங்குவது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

பாடசாலைகள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பிரச்சினைக்குச் சாதகமான தீர்வைக் காண்பது அரசின் பொறுப்பாகும். பாடசாலைகளை ஆரம்பிக்கும் போது மாணவர்கள் மட்டும் பாடசாலைக்கு வரப்போவதில்லை- என்றார். (ம-4)

## பரீட்சைப் பெறுபேறுகளை அறிவதற்கு இன்னொரு வழி

கொழும்பு, செப். 25

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி அறிந்து கொள்ள முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய பெரும்பாலான பரீட்சார்த்திகள் தங்களுடைய சுட்டெண்ணை மறந்துள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

பரீட்சைச் சுட்டெண்ணை மறந்த, பரீட்சார்த்திகள் தங்களுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி, தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிடவோ அல்லது தரவிறக்கம் செய்துகொள்ளவோ முடியும்.

இதேவேளை, பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின், அது தொடர்பில் 011 2 784 208, 011 2 784 208, 011 2 784 537 அல்லது 011 3 140 314 மற்றும் 1911 ஆகிய விசேட தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## நாடு மீண்டும் திறக்கப்படும்போது

# பொதுப் போக்குவரத்தில் மிகக்கூடுதலான கவனம்

### சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளார் தெரிவிப்பு

நாடு மீண்டும் திறக்கப்படும்போது பொதுப்போக்குவரத்துச் சேவைகளை கடுமையான முறையில் மேற்கொள்ளத் தவறினால் நாட்டில் மேலும் கொரோனாத் தொற்று பரவலடையும் என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளரான மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தன[illegible]
தர[illegible]




அறிவிப்புக்கு முன்னர் போக்குவரத்து அதிகாரிகள் திட்டத்தை முன்னதாக அறிவித்தால் அன்றாட நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ள முடியும்.

நாளாந்தம் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்கள் குறைக்கப்பட்டாலும், நாட்டில் இன்[illegible] ஆபத்து உள்ளது. எனவே [illegible] மக்கள் சுகாதார ஆலோச[illegible]களை கடுமையான முறைய[illegible] பின்பற்ற வேண்டும். எதிர்கா[illegible]தில் ஊரடங்கு உத்தரவு நீக்[illegible]பட்டாலும் அன்றாட நடவடிக்[illegible]களை மேற்கொள்ளும்போ[illegible] அனைத்து பொதுமக்களும் சுகாத[illegible] வழிகாட்டல்களை கடைப்பிடி[illegible] வேண்டும் - என்றார். (ஐ-[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# செயற்கைமுறைக் கருக்கட்டலும் அதற்கான ஆயத்தப்படுத்தலும்



**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்.
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்தியநிபுணர்.
யாழ். போதனா வைத்தியசாலை.



## குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்



7

இன்றைய காலகட்டத்தில் மிக முக்கிய பிரச்சினையாகக் காணப்படும் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்துக்கான காரணங்களைக் கண்டறியும் பரிசோதனைகளும் அதற்குரிய சிகிச்சை முறைகளும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கருத்தரித்தலில் ஏற்படும் தாமதத்துக்காகக் காணப்படும் "செயற்கைமுறைக் கருக்கட்டல்" சிகிச்சையானது, தற்போது இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கூட பயன்படுத்தப்படுகின்ற மேம்பட்ட சிகிச்சை முறையாகும். 1978 இல் முதன்முறையாக இங்கிலாந்தில் வெற்றிகரமாக செயற்கைமுறைக் கருக்கட்டல் மூலமாக முதலாவது பரிசோதனைக் குழாய் குழந்தை உருவாக்கப்பட்டதிலிருந்து, இன்றுவரை மில்லியன் கணக்கான தம்பதியினருக்கு இந்தச் சிகிச்சை முறை பயன்பட்டதுடன் , 1999 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையிலும் இம் மேம்பட்ட சிகிச்சைமுறையானது பயன்பட்டுவருகின்றது.

இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைகள் IVF (In Vitro Fertilization) அல்லது test tube baby (பரிசோதனைக் குழாய் குழந்தை) எனும் பல்வேறு பெயர்களில் மக்கள் மத்தியில் பரவலாக அறியப்படுகின்றன.

இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டலானது பெண்ணின் முட்டையையும் ஆணின் விந்தையும் ஆய்வு கூடத்தில் கருக்கட்டவைத்து, அந்தக் கருவை பெண்ணின் கருப்பையினுள் வைக்கும் சிகிச்சை முறையாகும். இந்தச்சிகிச்சை முறையின் பல்வேறு படிநிலைகளுக்கு உயர்தொழிநுட்ப வசதிகள் மிக அவசியமாகத் தேவைப்படும் காரணத்தினால் அடிப்படைச் சிகிச்சைமுறைகளினை விட மேம்பட்ட இந்தச் சிகிச்சைமுறைகளுக்காக ஏற்படும் செலவும் அதிகமாகக் காணப்படுகிறது. உயர்தொழினுட்பவசதிகள் மற்றும் அதற்கான செலவு காரணமாக தற்காலத்தில் இந்தச் சிகிச்சை முறையானது இலங்கையில் தனியார் வைத்தியசாலைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

இம்மேம்பட்ட சிகிச்சைமுறையானது கருத்தரித்தல் தாமதம் ஏற்படும் தம்பதிகளில் சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத் தெரிவுசெய்யப்படுகின்றது. இந்தச் சிகிச்சை முறையானது பலோப்பியன் குழாய் அடைபட்டமை,அடிப்படைச் சிகிச்சையின் பின்பும் முட்டை விருத்தியின்மை, விந்தணுக்களில் ஏற்படும் குறைபாடு, தம்பதியினரில் அடிப்படைச் சிகிச்சைமுறைகள் வெற்றியளிக்காத சந்தர்ப்பங்களிலும் காரணம் இல்லாமல் கருத்தரிக்காத தம்பதியினருக்கும் பரிந்துரைக்கப்படுகிறது. இருப்பினும், இந்தச் சிகிச்சையை விரும்பும் தம்பதியினர் இதனை முதற்படியாகவும் ஆரம்பிக்கலாம். அடுத்ததாக இந்தச் செயற்கைமுறைக் கருக்கருக்கட்டல் சிகிச்சைமுறையானது ஒரு குழுவினால் மேற்கொள்ளப்படும்.


இந்தக்குழுவில் கருத்தரித்தல் தாமதமடைவதற்கான சிகிச்சைமுறைகளில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற மருத்துவ நிபுணர்களும் (VOG,Embryolist) தாதிய உத்தியோகத்தர்களும் காணப்படுவர். இந்தச் சிகிச்சைமுறைக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உயர்தர தொழில்நுட்பவசதிகளுடன் கூடிய ஆய்வு கூடமும் , சத்திரசிகிச்சைக் கூடமும் அவசியமாகும்.

இந்தச் சிகிச்சைமுறையானது மேற்கொள்ளப்படும் முன்னராக தம்பதியிருக்கு வழங்கப்படும் மருத்துவ மற்றும் உளநல ஆலோசனையானது இந்தச் சிகிச்சைமுறையின் வெற்றிக்கு உறுதுணையாக அமையும். இதற்கு முன்னரான மருத்துவ ஆலோசனையின் போது பழைய சிகிச்சை முறைகள் ஆராய்ந்து பார்க்கப்படுவதுடன் ,சில நோய்நிலைமைகளைக் கண்டறிய விரிவான மருத்துவக் கணிப்பீடும் இடம்பெறும். பின்னர் இரத்தம், விந்துமாதிரிகளின் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் (FBC,HbA1C,Thyroidprofile) இந்தப்பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் மருத்துவ ஆலோசனையானது இம் முடிவுகளினை விளங்கப்படுத்துவதாகவும் அடுத்தகட்ட சிகிச்சைமுறையினைத் திட்டமிடுவதாகவும் அமையும்.

இந்தச் சிகிச்சைக்காக தம்பதியினரைத் தயார்ப்படுத்தும் போது குறிப்பாக நீரிழிவு,தைரொயிட் பிரச்சினைகள் , உயர் குருதியமுத்தம் முதலிய நோய்களுக்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கண்டறியப்பட்டு தேவையேற்படின் சிகிச்சைவழங்குதலும் இடம்பெறும். இந்தச்சிகிச்சை மேற்கொள்ளும் காலப்பகுதியில் சமநிலையான உணவுப்பழக்கங்களை மேற்கொள்ளல் ஆரோக்கியமான சுறுசுறுப்பான வாழ்க்கைமுறையைக் கடைப்பிடித்தல என்பன சிகிச்சைமுறையின் வெற்றிக்குப் பங்களிக்கும். உதாரணமாக அதீத உடற்பருமன் கொண்ட தம்பதியினர் உடல் நிறையைக் குறைத்தல் ,சிகரெட் மற்றும் மதுபான வகையை நிறுத்துதல் போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களைக் குறிப்பிடலாம். தம்பதியினரில் சிகிச்சைக்காக போலிக்கமிலம் (Foilc acid) ,மற்றும் சில விற்றமின்களும் கனியுப்புக்களும் பயன்படுத்தப்படல் ஆரோக்கியமான கரு உருவாதலில் தாக்கம் செலுத்துவதாக விஞ்ஞானரீதியான தரவுகளின் அடிப்படையில் நம்பப்படுகிறது.

உளவியல் தொடர்பாக தம்பதியினரை ஆயத்தப்படுத்தும் படிநிலையில் உளவளத்துணையாளர் ஒருவரின் உதவியுடன் உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படல் , தியானம் (meditation) மற்றும் யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள ஊக்கமளித்தல் என்பன உள்ளடங்கும். அத்துடன் உளவள ஆலோசனைகளும் தீர்வுகளும் தம்பதியினரில் காணப்படும் மனஅழுத்தத்தைக் குறைப்பதுடன், கருத்தரித்தல் வீதத்தை அதிகரிப்பதாகவும் விஞ்ஞானரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சிகிச்சைமுறையின் வெற்றிக்கு சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு முன்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற்று,வாழ்க்கைமுறையில் மாற்றங்களினை ஏற்படுத்தி, தரப்படும் சிகிச்சையினை (உதாரணமாக மருந்துகள்) சரியாக எடுத்துக் கொள்ளலும் ,உளவியல் தொடர்பான ஆலோசனைகளைப் பின்பற்றலும் முக்கியமானதாகவே காணப்படுகிறது. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தச் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைக்காக வருகை தரும் தம்பதியினரில் வயது அதிகமாகக் காணப்படுதலும் தொற்றாநோய்களுக்கான அபாயக் காரணிகள் காணப்படுதலும் ,மேலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைகளினால் மனஉளைச்சல் போன்ற உளத்தாக்கங்கள் காணப்படுதலும் அவதானிக்கப்பட்டுள்ளது.




ஆகவே ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பத்தினதும் பொருளாதாரக் கட்டமைப்புக்கு ஏற்றவகையிலும் ,தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகளுக்கு ஏற்ப தனிப்பட்ட முறையில் திட்டமிடப்பட்ட சரியான சிகிச்சை முறையைத் தேர்ந்தெடுப்பதிலும் மருத்துவ ஆலோசனை இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையின் வெற்றிக்குப் பெரிதும் பங்குவகிக்கின்றது.

தம்பதியினர் மருத்துவ மற்றும் உளவியல் ரீதியாக ஆயத்தப்படுத்தப்பட்டபின்னர் செயற்கைமுறையான கருக்கட்டல் சிகிச்சை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என விரிவாகப் பார்க்கலாம். பொதுவாக பெண்ணின் கருமுட்டையையும், ஆணின் விந்தையும் ஆய்வு கூடத்தில் கருக்கட்டவைத்து, அந்தக் கருவினைப் பெண்ணின் கருப்பையினுள் வைக்கும் சிகிச்சைமுறையாகக் காணப்பட்டாலும் ,தம்பதியினரில் காணப்படும் பிரச்சினைகள் அடிப்படையில் தனிப்பட்டரீதியில் வடிவமைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும். இந்தச் சிகிச்சையைஆரம்பிக்கும் முன்னராகச் செய்யப்படும் சில பரிசோதனைகள் சிகிச்சையில் சரியாகத் திட்டமிட்டு வெற்றியளிக்கும் நோக்கில் செய்யப்படும். இவற்றில் பெண்களுக்கான ஸ்கான் மூலம் சூலகத்தில் காணப்படும் முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அளவு (antral folilcular count) என்பன முட்டை வளர்ச்சியின் வினைத்திறனை எதிர்வுகூற உதவும். இந்த ஸ்கான் ஆனது மாதவிடாய்க்கு பின்னர் 2-3 ஆம் நாளில் செய்யப்படும். மேலும் 'AMH' எனப்படும் ஒருவகையான ஹோமோனின் அளவினை குருதிமாதிரியில் பரிசோதித்தல் போன்ற பரிசோதனைகளும் இதே நோக்கில் இடம்பெறும். இவ்விரு பரிசோதனைகளுடன் பெண்ணின் வயது,முன்னர் சூலகத்தில் இடம்பெற்ற சத்திரசிகிச்சைகள், என்டோமற்றியோசிஸ் போன்ற நோய் நிலைமைகளினால் சூலகத்தில் காணப்படும் முட்டைகளின் எண்ணிக்கை மற்றும் தரம் என்பவற்றினை அறிந்துகொள்ள உதவும்.

ஆண்களுக்காகச் செய்யப்படும் பரிசோதனையாக சுக்கிலப்பாய அறிக்கையானது காணப்படுகிறது. இந்தப் பரிசோதனையில் விந்துக்களின் எண்ணிக்கை, அசையும் தன்மை, உருவஅமைப்பு போன்றன அறியப்படும். இந்த அறிக்கைப்படி விந்துக்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் முட்டையினுள் நேரடியாக விந்தணுவை ஆய்வுகூடத்தில் உட்செலுத்தும் (ISCI) முறை மூலமாக செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சை இடம்பெறும். இந்த அறிக்கையில் விந்தணுக்கள் எதுவும் காணப்படவில்லை எனின் அல்லது விந்தணுக்களில் குறைபாடுகள் அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மேலதிக சிகிச்சைக்காக சனனி சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரின் மருத்துவ ஆலோசனை பெறப்படும். கருத்தரித்தல் தாமதமடைவதற்கான காரணமானது அறியப்படாத சந்தர்ப்பங்களில் முன்னைய கட்டுரையில் விபரிக்கப்பட்ட ஆண்களுக்கான பரிசோதனைகளான ஓமோன் , ஸ்கான் ,மரபணுச் சோதனைகள் போன்றன இடம்பெற்று சரியான முறையில் தகுந்தகாரணம் அறியப்பட்டு செயற்கை முறைக் கருக்கட்டல் சிகிச்சைகளுக்காக ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

ஆண்களில் விந்து எண்ணிக்கை மிகக்குறைவாக அல்லது பெண்களில் முட்டைகளின் எண்ணிக்கை, தரம் மிகக்குறைவாகக் காணப்படும் சில சந்தர்ப்பங்களில் தானமாக விந்து அல்லது முட்டை பெறப்பட்டு செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சையானது வழங்கப்படக் கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.




செயற்கைமுறைக் கருக்கட்டல் சிகிச்சைகள் ஆரம்பிக்கும் முன்னராக சிகிச்சை பற்றிய பூரணவிளக்கம் அதற்கான செலவு,வெற்றியளிக்கும் வீதம் மற்றும் குறிப்பாக முட்டை மற்றும் விந்துதானம் தொடர்பான விளக்கங்கள் தம்பதியினருக்கு மீண்டும் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ள சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தம்பதியினரின் சம்மதமானது சம்மதப்படிவம் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும். இந்தச் சம்மதப் படிவத்தில் தம்பதியினரின் சம்மதத்தை வெளிப்படுத்தும் இருவரினதும் கையொப்பங்களும் சிகிச்சையளிக்கும் மருத்துவரின் கையொப்பம்,சாட்சியாளரின் கையொப்பம் போன்றனவும் இடம்பெறும் . அத்துடன் தம்பதியினரின் ஆளடையாளத்தினை சட்டரீதியான தேவைகளுக்காக உறுதிப்படுத்தும் நோக்கில் தம்பதியினரின் சுயவிபரக்கோவையுடன் தேசிய அடையாள அட்டை மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழின் பிரதிகளும் இணைக்கப்படும். இந்தச் சம்மதப்படிவமானது சட்டரீதியாக ஒரு முக்கிய ஆவணமாகவும் சிகிச்சைக்கான தம்பதியினரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் படிவமாகவும் காணப்படுகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் சாலி பேசினால் இனவாதம் ஞானசாரர் பேசினால் இல்லையா?

## சாணக்கியன் எம்.பி. கேள்வி



கொழும்பு, செப்.25

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அல்லாஹ் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். ஞானசார தேரர், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமற்ற ஊடகப் பேச்சாளராக விளங்குகிறார்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பிரதமர் மஹிந்த ராஜபக்ச இத்தாலிக்குச் சென்றபோது மக்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்களை எழுப்பியிருந்தனர். அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்ப மக்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் அறிகின்றோம்.

கடந்த காலங்களில் இவ்வாறு கோஷங்களை எழுப்பியவர்கள் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களாகவே காணப்பட்டனர். இப்போது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் கோஷமெழுப்புகின்றனர்.

ஞானசாரதேரர் கடும் இனவாத போக்குடன் செயற்படுகிறார். அவரது கருத்துக்களும் அவ்வாறே உள்ளன. நாங்கள் இனவாதமாகச் செயற்படும் மதத்தலைவர்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுவோம்.

அடிப்படைவாத தாக்குதல்தாரிகளுக்கு சூத்திரதாரி அல்லாஹ்தானென ஞானசாரதேரர் சொல்கிறார். அவரின் கருத்தைக் கண்டிக்கிறேன்.

இந்தக் கருத்துத் தொடர்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பதேன்?. எந்த நேரத்திலும் இலங்கையில் தாக்குதல் நடக்கலாம் என்று ஞானசார தேரர் கூறுகிறார். அப்படியானால் முதலீட்டாளர்கள் எப்படி நாட்டுக்கு வருவார்கள்?.

ரிசாத், அஷாத் சாலி பேசினால் இனவாதம், ஆனால் ஞானசாரர் பேசினால் அது இனவாதம் இல்லையா? நான் இங்கு உரையாற்றிக் கொண்டிருக்கும் போது இங்கு கூச்சலிடும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டும் தனது தொகுதிக்கு வந்தால், அவரைப் போன்றவர்களை மக்கள் அடித்து விரட்ட வேண்டும். -என்றார். (எ-இ)


# உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, செப்.25

வருடாந்த உணவுப் பணவீக்கம் கடந்த 11 மாதங்களில் ஓகஸ்ட் மாதத்தில் அதிகபட்சமாக 11.1 வீதமாக உயர்ந்துள்ளது என்று சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத் தரவு தெரிவிக்கிறது.

இதைவிட அதிக அதிகரிப்பு 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதிவாகியிருந்தது. அந்த மாதத்தில் உணவுப் பணவீக்கம் 12.7 வீதம் ஆக உயர்ந்தது.

கடந்த மாத உணவுப் பணவீக்கத்தின் அதிகரிப்பு, ஒரு குடும்பத்தின் அரிசி நுகர்வுச் செலவு சராசரியாக ரூ. 525.48 ஆல் உயர்ந்துள்ளது. இதன் விளைவாக ஒட்டுமொத்த குடும்பத்தின் உணவுக் கூடையின் விலை சராசரியாக ரூ.2 ஆயிரத்து 248.07 ஆல் அதிகரித்துள்ளது. (எ)



# நுழைவிசைவின் காலத்தை அதிகரிக்க சட்டத் திருத்தம்!

கொழும்பு, செப்.25

நுழைவிசைவு அனுமதிக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீடிப்பது உள்ளிட்ட விடயங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள குடிவரவு குடியகல்வு (திருத்தச்) சட்டவரைவு இரண்டாவது வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த புதன்கிழமை நடந்த பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நுழைவிசைவு அனுமதியை வழங்கக்கூடிய கால எல்லையான 2 வருடங்களை 5 வருடங்கள் வரை இந்தத் திருத்தத்தின் ஊடாக அதிகரிக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜெனரல் சரத் ரூபசிறி தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை, இந்தத் திருத்தத்தின் ஊடாக வதிவிட நுழைவிசைவு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும், இது தொடர்பான ஒழுங்குவிதிகள் எதிர்வரும் காலத்தில் தயாரிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதை ஏற்கவே முடியாது

## தேர்தல் முறைமைத் தெரிவுக்குழுவுக்கு மனோ தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20 ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட நிலையில், மாகாணசபை, நாடாளுமன்ற தேர்தல் முறைகளை கலப்பு முறைக்கு மாற்றி, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களையும் ஒழித்து, மாகாணசபை, நாடாளுமன்ற மக்கள் மன்றங்களை மேலும் பலவீனமாக்க இடமளிக்கவோ முடியாது - என்று தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தக் குழுவில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தத் தெரிவுக் குழு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடியபோது, த.மு.கூ. தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் வி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழுவினர் தமது கருத்துக்களை நேற்று எடுத்துக் கூறினர் அதன்போதே மனோகணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த தேர்தல் முறை மாற்றம் எமது ஆட்சிக்காலத்தில் கலப்பு முறைக்கு பரீட்சார்த்தமாக மாற்றப்பட்டது. ஆனால், அந்த மாற்றம் உள்ளூராட்சி மன்றங்களில் நிலையான ஆட்சிக்கு வழிகாட்டவில்லை. அத்துடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நாடெங்கும் ஏறக்குறைய அறுபது முதல் எழுபது விகிதம் அதிகரித்தது. ஆனாலும், குழப்ப நிலைமையே ஏற்பட்டது.

இந்நிலையில், இதே விதமான குழப்ப நிலைமையை மாகாணசபை, நாடாளுமன்றங்களிலும் ஏற்படுத்தி இந்நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்க வேண்டாம். எமக்கு முன் சாட்சியம் அளித்த இன்னொரு கட்சியின் பிரதிநிதி, சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களை வெட்டிக் குறைத்தால், அவர்கள் கடந்த காலங்களைப்போல் வேறுவழி இல்லாமல், ஆயுதம் தூக்கும் நிலைமைக்குத் தள்ளப்படுவார்கள் என எச்சரித்தார்.

அது உண்மை. ஆனால், அந்த நிலைமை வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் ஏற்பட்டது என்பதை நான் இந்தக் குழுவுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் நியாயமான பிரதிநிதித்துவங்களைப் பெற முடியாத நிலையில், தென்னிலங்கையிலும் சிங்கள இளையோர் இப்படி ஆயுதம் தூக்கினார்கள்.

இன்று விகிதாசார முறையின் கீழ்தான் இந்த நிலைமை மாறியது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனதான், உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்றங்களுக்கு விகிதாசார தேர்தல் முறைமையையும் கொண்டு வந்து அறிமுகம் செய்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சில பிழையான செய்கைகளுக்கு மத்தியில் அவரது தீர்க்கதரிசனமிக்க சரியான செய்கை இதுவாகும். இன்று நீங்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இன்னமும் பலமிக்கதாக 20ஆம் திருத்தத்தின் மூலம் மாற்றியுள்ளீர்கள். இது உண்மை.

எனவே ஒரு சிலரின் தேவைகளுக்காக, விகிதாசார தேர்தல் முறைமையை மாற்றி நாட்டை மீண்டும் அராஜக படுகுழியில் தள்ள வேண்டாம் - என்றார். (ம)

# ஞானசார தேரரின் கருத்தால் முஸ்லிம்களுக்கு அபகீர்த்தி

## முஜிபுர் எம்.பி. சீற்றம்

கொழும்பு, செப்.25

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் சோடிக்கப்பட்ட கருத்துக்களால் முஸ்லிம்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதத் தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் குரான் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் திரிபுபடுத்தப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுக்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக அல்லாஹ்வை குறிப்பிட்டு கூறியுள்ளதால், உலகில் உள்ள கோடிக் கணக்கான முஸ்லிம்களின் நம்பிக்கைக்கு அவர் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார்.

முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஞானசார தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? -என்றார். (ஆ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 06 . 1977

மறைவு 22 . 09 . 2021

## திருமதி தமிழினி பிரபாகரன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்)**

ஆஸ்பத்திரியடி கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமிழினி பிரபாகரன் கடந்த (22.09.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (நில அளவைத் திணைக்களம்) - பேரின்பராஜி (லிகிதர் - யாழ். கச்சேரி) தம்பதியரின் பாசமிகு மகளும், வயிரவப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபாகரனின் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) பாசமிகு மனைவியும், துவாரகனின் (மாணவன் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும், ஜமுனா (சுவிஸ்), ஜெயமயூரன் (லண்டன்), யாழினி (லண்டன்), கஜேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வக்குமார், மனோஜா, மதியழகன், தனோயா, சுதாகரன், கார்த்திப்பிரியா (டுபாய்), வரதராஜன் (உதவிப் பிராந்திய முகாமையாளர் - Abans), சுதர்சினி (அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு.**
**077 605 1245.**

**தகவல்:**
**வ.பிரபாகரன் (கணவர்)**

# மரண அறிவித்தல்



**பிறப்பு :18.11.1945** **இறப்பு: 24.09.2021**

## சுசீலாதேவி தர்மலிங்கம்

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தமிழ்நாடு- சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட சுசீலாதேவி நேற்று (24.09.2021) சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்) இரத்தினம்மா தம்பதிகளின் மகளும், சுப்பையா தர்மலிங்கத்தின் மனைவியும், சுதர்ஜினி, சுதாஹரன், சுதாரிணி ஆகியோரின் தாயாரும், அன்னலட்சுமி, நல்லையா, அருந்தவமலர், ஞானகலாராணி, சரவணபவன் மற்றும் சர்வானந்தா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.09.2021) சென்னையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்தம் குடும்ப நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### தேவை

தானிய வகை, தேங்காய், கொப்பறா கொள்வனவு செய்யப்படும்.
மில் வேலை ஆட்கள் தேவை
**தொடர்பு: 077 772 2215**

### Online English Classes

தமிழ் மொழி மூலம் Spoken English, Grammer சகல வயதினருக்குமான வகுப்புக்கள்
**Contact 075 143 5606**

### தவறவிடப்பட்டுள்ளது

கணபதிப்பிள்ளை கருணாமூர்த்தி எனும் பெயர் கொண்ட சாரதி அனுமதிப்பத்திரம் 16.08.2021 அன்று யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.
**077 414 6425** க.கருணாமூர்த்தி

### விதை நெல் விற்பனைக்கு

சுத்திகரிக்கும் இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப் பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிக விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 நெல்லும் 04 மாத விதை நெல்லும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: **077 659 2044**

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
- அலுமினிய பொருத்துனர் – 1500.00 - 2000.00
- மின் இணைப்பாளர் (Electrician - 1500.00
- குழாய் பொருத்துனர் (Plumber ) - 1500.00

காலை 8.30 தொடக்கம் மாலை 6.00 வரை தொடர்பு கொள்ளவும்
**076 058 6045**

### மணமகள் தேவை

யாழ் இந்து, 1987, மிருக சீரிடம் 4ம் பாதம், சூரி.செவ் 3இல், கி.பா 6, அரச பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 616 1739**

### வீடு காணி விற்பனைக்குண்டு

சுன்னாகம் வாழைக்குலைச் சந்தி ஒழுங்கைக்கு அருகாமையில் வீடு மற்றும் கிணற்றுடனான 2 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.
**077 465 4577**

### தவறிவிட்டது

நேற்று (24.09.2021) யாழ் கே.கே.எஸ் வீதியில் சத்திர சந்தியடியில் புவனேந்திரன் யான்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (802693370V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட் ஆகியவை அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: **077 163 4305**

### காணி வாடகைக்கு

B.A தம்பி ஒழுங்கையில், K.K.S வீதியிலிருந்து சுமார் 400m தூரத்தில் சுற்றிவர மதிலுடன் கூடிய அறுக் கையுள்ள 1 ¼ பரப்புக் காணி வாடகைக்கு உண்டு. கராஜ், ஓட்டுத் தொழிலகங்கள் முதலியன அமைத்துக் கொள்ளலாம்.
தொடர்பு: ச. மகிந்தன் **077 820 9424**

### மணமகன் தேவை

யாழ் இந்து, 1991, மூலம் 1ம் பாதம், செவ் 6இல், கி.பா 39, 1/4, அரச பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 616 1739**

# பதற்றமற்ற வெற்றியுடன் முதலிடத்தில் சி.எஸ்.கே.



சார்ஜா, செப். 25

ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸை அபாரமாக வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்தது சென்னை சுப்பர் கிங்ஸ். அத்துடன் பிளேஆப் சுற்றை உறுதிப்படுத்தும் நிலைக்கும் சென்னை சென்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்த ஆட்டம் சார்ஜாவில் இடம்பெற்றது. சார்ஜா சிறிய மைதானம். எனவே ஆரம்பம் முதல் அதிகளவான பவுண்டரிகளுடன் இன்னிங்ஸைக் கட்டமைக்க வேண்டிய தேவை ஆர்.சி.பிக்கு இருந்தது. அதற்கேற்பவே ஆர்.சி.பி. தன் இன்னிங்ஸையும் கட்டமைத்தது. இலக்குச் சரிவில்லாமல் 11 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது ஆர்.சி.பி. அதன் பின்னர் சென்னை சுப்பர் கிங்ஸ் கட்டுக்கோப்பான பந்துப்பரிமாற்றங்களை வீசி ஆட்டத்துக்குள் திரும்பி வந்தது. 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோலி. அவர் இதற்காக 41 பந்துகளை எதிர்கொண்டார். படிக்கல் மறுமுனையில் நிலைத்து நின்றாலும் வில்லியர்ஸ் 12, மக்ஸ்வெல் 11 என்று ஏமாற்றினார்கள். குறைந்தது 190 ஓட்டங்களையாவது பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆர்.சி.பியால் 6 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

பந்துவீச்சில் பிராவோ 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களான ஹெய்க்வாட், டுபிளஸி நம்பிக்கையான ஆரம்பத்தைக் கொடுத்தனர். அணி 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹெய்க்வாட். டுபிளஸியும் 31 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஆனால் ஆர்.சி.பி அணியால் சென்னையை அடக்கிவிட முடியவில்லை. சீரான பங்களிப்பை அனைவரும் வழங்கினார்கள். மொய்ன் அலி 23 ஓட்டங்களையும் அம்பதி ராயுடு 32 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு அருகில் சென்னையை அழைத்துவந்தனர். ரெய்னா ஆட்டமிழக்காமல் ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற சென்னை அணி இலகுவாக வெற்றிபெற்றது.

(ம)

### வீடு வளவு பராமரிப்பாளர் தேவை

மல்லாகம், தெல்லிப்பளை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வளவு பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. பகுதி நேரமாக பணி செய்ய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
சம்பளம் நேரில் பேசலாம்.
தொடர்பு எண் **076 668 7947**

### தேவை

எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் கூலியாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும். **தொடர்புகளுக்கு : 077 846 9173, 075 996 9173**

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய தர்மகர்த்தாசபை செயலாளர் அவர்களின் தந்தையும், மகாசபை உறுப்பினருமாகி

## அமரர் கந்தசாமி சாந்தகுமார்

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது இரங்கலை தெரிவிக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை**
**யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**(நாச்சிமார் கோவில்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் : 13.05.1935 மறைவு : 24.09.2021

## துரையப்பா மாரிமுத்து

அராலி தெற்கு கரப்பிட்டி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா மாரிமுத்து நேற்று (24.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2021) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அன்னாரது வீட்டிலிருந்து தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### யாழிலிருந்து கொழும்புக்கு கஞ்சா கடத்தல்

# பொலிஸ் அலுவலர் உட்பட மூவர் காருடன் மாங்குளத்தில் கைது



முல்லைத்தீவு, செப். 25

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் காரில் கடத்தப்பட்ட 6 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டது. அதனைக் கடத்திச்சென்றனரென பொலிஸ் அலுவலர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்றது.

கஞ்சா கடத்திச்சென்றுகொண்டிருந்த போது, ஏ9 வீதி மாங்குளம் பகுதியில் சோதனையிட்டபோதே கடத்தல் தெரியவந்தது.

கடத்தலுக்குப் பயன்படுத்திய காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரும் யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் வாய்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என்று தெரிவித்தனர். (த-19)

# கோவில் குருக்கள் கொரோனாவால் சாவு

முல்லைத்தீவு, செப்.

முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணி மேற்கு கற்பக விநாயகர் கோவில் குருக்கள் கொரோனாத் தொற்றுக்கு இலக்கான நிலையில் நேற்று உயிரிழந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த சத்தியேந்திரா குருக்கள் (வயது - 33) என்பவரே உயிரிழந்தார்.

தொற்று அறிகுறிகளுடன் நேற்றுமுன் தினம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் கொரோனாத் தொற்றால் நேற்று முதியவர் ஒருவரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-19)

## முதலாம் பக்கத்தொடர்ச்சி

**நாடு ...**

மானித்தது.

எதிர்வரும் முதலாம் திகதி நாடு திறக்கப்படும் என்ற முன்னைய அறிவிப்பைத்தவிர, ஊரடங்கு எப்போது நீக்கப்படும் என்ற விடயம் ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையில், கொரோனா ஒழிப்புக்கான செயலணியின் கூட்டம், வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

சுகாதார வழிகாட்டல்கள் 03 துறைகளின் கீழ் தயாரிக்கப்படவுள்ளன.

அரச துறையைச் செயற்படுத்துவதற்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு பொது நிர்வாக அமைச்சிடமும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளுக்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு போக்குவரத்து அமைச்சிடமும், தனியார்துறைச் சேவைகளை நடத்துவதற்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு தொழிற்துறை அமைச்சிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சுகாதார நிபுணர் குழுக்கள் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டல்களின் கீழ், மேற்படி பொறுப்புவாய்ந்த அமைச்சுகளால் பரிந்துரைகள் வெளியிடப்படும்.

மேற்படி திட்டமிடல் செயற்படுத்தப்படும்போது, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் ஊடகத்துறையின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**வீழ்ச்சி**

2021 இரண்டாவது காலாண்டுப் பகுதியில், 12.3 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தைப் பேணக் கிடைத்தது. எனினும், நாட்டை மூடி வைத்திருப்பதால், மூன்றாவது காலாண்டில் அது ஒரு சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

4ஆவது காலாண்டிலேனும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை 3 சதவீதமாகப் பேணும் இலக்கை நோக்கிப் பயணிப்பது அத்தியாவசியமாகி உள்ளது. எவ்வாறெனினும், இந்த ஆண்டின் மொத்தப் பொருளாதார அபிவிருத்தி வீதத்தை 5 சதவீதமாகப் பேண எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாடசாலைகள்**

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலான பரிந்துரைகள் சுகாதார நிபுணர்கள் குழுவால் கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆளுநர்கள் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு, இந்தப் பரிந்துரைகளை நேரடியாக அனுப்பிவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

**பெற்றோருக்கும் பங்கு**

தடுப்பூசி ஏற்றும் பணிகள் முழுமையடையும் வரை பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, காத்திருக்கத் தேவையில்லை. என்று, யுனிசெப் உள்ளிட்ட சிறுவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்புகள் மற்றும் உள்நாட்டின் சிறுவர் நோயியல் விசேட வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சிறுவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எவ்விதத் தடைகளுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் என்பன விரைவாகத் திறக்கப்பட வேண்டும். அதற்கு உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெற்றோரின் அர்ப்பணிப்பு மற்றும் அக்கறை போன்றன இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**தொற்று நீக்கம்**

பாடசாலைகளைச் சுத்தப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கல் பணிகளுக்கு, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் நேரடிப் பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

**ஆயுள்வேத கொரோனா சிகிச்சை**

சுற்றுலாத்துறை அபிவிருத்தியை இலக்குவைத்து, சுற்றுலா வலயங்களுக்கு அருகில் புதிய ஆயுள்வேத கொரோனா சிகிச்சை நிலையங்களை நிறுவுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

**இலவச சுதேச மருந்துப்பெட்டி**

சுதேச மருத்துவ அமைச்சினால், நாடு முழுவதிலுமுள்ள வீடுகளுக்கு இலவசமாக விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ள நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் சுதேச மருந்துப் பெட்டிக்கான அனைத்துத் திட்டமிடல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்காக 6 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர், எந்தவிதத் தடுத்து வைப்புகளுமின்றி, தெரிவு செய்யப்பட்ட ஹொட்டல்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்துவரும் இலங்கையர்கள், அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கை, சுமார் 2, 3 மணித்தியாலங்களுக்குள் விநியோகிக்கப்படுகின்றமையால் இதன்போது எவருக்கேனும் தொற்று உறுதியானால், உரிய பொதுச் சுகாதார அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு, தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும். - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14.07.1940

மறைவு 06.10.2020



## திரு. அப்பாத்துரை சபாரட்ணம்

பாரினில் யாருண்டு - உமைப் போல
வாரித்தந்திட பாசத்தினை
ஊரினில் யாருண்டு - உமைப்போல
உதிரம் உறைந்து உருகி உழைத்திட
உத்தமராய் வித்தகராய் எமை உயர்த்தி
வளர்த்திட்ட பாசமிகு எங்கள் அப்பா
பிள்ளைகளெமை பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும்
உள்ளமெலாம் நீங்காத நினைவுகளாய் என்றும் நீங்களே
ஏற்றம் பல கண்டாலும் எம் வாழ்வில் - உங்கள்
தோற்றம் எம் கண்களை விட்டு அகலாது
மனையும் மாறவில்லை
மனைவியும் ஆறவில்லை
துணையாக வாழ்ந்த நீங்கள் மட்டும் எம்மை விட்டுவிலகியதேனோ?
உங்கள் ஆன்மாவும் தெய்வங்களுடன் இரண்டற கலந்து நல் நிலைப்படுத்த ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!!, ஓம் சாந்தி!!!

எச்சாட்டி வைரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,, பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 02 . 08 . 1944

மறைவு 27 . 08 . 2021



## அமரர் சின்னத்தம்பி சிவநேசன்

சிரேஷ்ட சட்டத்தரணி

திதி : ஷஷ்டி

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் தந்தையே!

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் சின்னத்தம்பி சிவநோசன் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஆகியவை மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள், சாத்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எங்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மிக எளிமையாகவும் அமைதியாகவும் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
077 375 4243

# மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1957

இறப்பு 24 . 09 . 2021



## அமரர் தவமலர் நாகராசா

### கலைவாணி நகை மாளிகை முகாமையாளர் மனைவி

அராலி வடக்கு செட்டியாமடத்தை பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தவமலர் நாகராசா அவர்கள் நேற்று (24.09.2021) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சோமசுந்தரம் நாகராசா (கலைவாணி நகை மாளிகை முகாமையாளர்) அவர்களின் அன்புத் துணைவி யாரும், சாளினி, அனோஜினி, ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, பிரதீப் அவர்களின் மாமியாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 711 1128, 077 194 4886
077 491 3587

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில் 23 . 02 . 1961

விண்ணில் 21 . 09 . 2021



## தர்மலிங்கம் லீலாவதி

யாழ் வயாவிளான் திடற்புலத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் லீலாவதி அவர்கள் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரன் தங்கம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற வீரன் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி (ஜேர்மனி), விதுரன், வேணுகா, தனரூபி, சுபேசன், திவ்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், தெகிந்தராசுவின் (ஜேர்மனி) பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற இராணியம்மா மற்றும் இரத்தினம் இரத்தின சிங்கம், சரஸ்வதி, மலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாதுகா, தாருகா, தீபிகா, அனாமிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் ...

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
கடந்த ஆண்டு இறுதியிலும், இந்த ஆண்டு ஆரம்பித்திலும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை மேற்கொள்ளச் செய்யும் சந்திப்புகளை நடத்துவதை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் முயற்சியோடு மதத் தலைவர்களும் இணைந்து ஊக்குவித்தோம். சில கூட்டங்களைத் தலைமையேற்றும் நடத்தியிருந்தோம்.

அதைப் போன்ற வரலாற்றுத் தேவை மீண்டும் எழுந்துள்ளது என்று அண்மைய நாள்களில் பல மட்டங்களில் இருந்து எம்மிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முறை சிக்கல்கள் எழும்போதும், அவற்றைத் தீர்க்கவென மீண்டும் மீண்டும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரு பொதுவான மாற்றீட்டு அணுகுமுறையை வகுத்துக் கொள்வதை ஆராய்வதே பொருத்தமானது.

இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கான முதற்கட்டமாக சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் கருத்துக்களை உள்வாங்கி, அடுத்த கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித் தனியாகவும், கூட்டாகவும் கலந்துரையாடி, தக்க வழியொன்றை வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏதேற்கான பூர்வாங்க செயற்குழு ஒன்றை எமது மேற்பார்வையில் உருவாக்கி வருகின்றோம்.

வடக்கு கிழக்கு இணைந்து மேற்கொள்ளும் இந்த முயற்சியில் சட்டத்துறை சார்ந்த இளம் தலைமுறையோடு, சிவில் சமூக மற்றும் மரபுரிமைச் செயற்பாடுகளில் இயங்கிய அனுபவம் கொண்டவர்களும், ஊடக அமையங்களை அமைத்துச் செயற்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களுமாக எந்தவித அரசியல் கட்சிப் பின்னணியும் இல்லாத ஐவர் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் முதற்கட்டமாக கல்வி மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடல்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூர்வாங்கக் குழுவின் பொதுத் தொடர்பை சட்டத்துறை சார்ந்த மூவர் கையாள்வது பொருத்தம் என்ற ரீதியிலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு இப்படியான முயற்சிகளுக்கு அவசியம் என்ற நோக்கோடும் இரண்டு சட்டத்தரணிகள்பால், மத மற்றும் பிரதேச சமத்துவத்துடன் இணைக்கப்பட்டு பொதுத் தொடர்பைக் கையாள வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். செயற்குழு மற்றும் பொதுத் தொடர்பில் பங்கேற்பவர்களின் விவரங்களை, ஆரம்பக் கலந்துரையாடல்கள் முடிந்தவுடன் வெளிப்படைத்தன்மையோடு அறியத்தரும் பணியை மன்னாரைச் சேர்ந்த சட்டத்தரணி அன்ரனி றொமேள்சனிடம் கைளித்துள்ளோம்.

இந்தக் குழுவில் இணைந்து கொள்ளவும், ஆலோசனைகளை வழங்கவும், இந்த முயற்சியை ஊக்குவிக்கவும் விரும்புவோர் participate@tamildemocracy.org என்ற மின்னஞ்சல் ஊடாகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

கல்வித்துறை, சட்டத்துறை, மனித உரிமை, ஊடகத்துறை மற்றும் இதர சமூகப் பரப்புகளில் இருந்து கருத்துக்களை உள்வாங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரோடும் கலந்தாலோசித்து உகந்த ஒரு பொறிமுறையை வகுக்கும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்ற நல்லாசியுடன், இந்த முயற்சியை ஆரம்பித்து வைப்பதில் மனநிறைவடைகின்றோம். இந்த முயற்சிக்கு அனைவரின் ஆதரவும் கிட்ட இறையருளை வேண்டி நிற்கின்றோம். என்றுள்ளது. (எ-இ)

## 82 பேர் சாவு! ...

சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 530 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 31 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 16 ஆண்கள், 5 பெண்கள் என 21 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 61 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 35 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று ஆயிரத்து 332 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 372 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 950 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 692 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## யாழ்.பொலிஸாரே...

கும் தனக்கும் இடையில் தனியாள் இடைவெளியைக்கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நல்லூரில் திலீபன் நினைவிடத்தில், அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடாந்தம் குடும்பத்தோடு அமைதியாக அஞ்சலி செலுத்துவார். அதுபோல இந்தமுறையும் சில நாள்களாக அஞ்சலி செலுத்திவந்தார்.

ஆனால் அஞ்சலி செலுத்துவதைப் பொலிஸார் தடுத்தனர். எதற்காக தடுக்கிறீர்கள்? நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினவினார். எனினும், தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவேந்த முடியாது என்றுகூறியே அந்த இடத்தில் கஜேந்திரனை பொலிஸார் கைதுசெய்தனர்.

எனினும், கஜேந்திரன் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்படும் நேரத்தில் "நினைவுகூருவது தவறு என நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை, கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைது செய்தோம்" என பொலிஸார் கூறினர்.

அதுமட்டுமன்றி, அராஜகமாக கஜேந்திரனின் உடலை பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கையை மேற்கொண்டனர். அவர் கைதுசெய்யப்பட்டதை அறிந்து அந்த இடத்துக்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர்.

இந்த விடயத்தில், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெனான்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். 27ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளை பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்குத்தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்குத் தெரியாமல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். கஜேந்திரனின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம். என்றார். (த-26)

## பால்மா...

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே விலை அதிகரிப்புக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ பால்மாவின் விலை 200 ரூபாவாலும், சமையல் எரிவாயுவின் விலை 550 ரூபாவாலும், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10 ரூபாவாலும், சிமெந்து மூடையொன்றின் விலை 50 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. (த-44)

## இனம்...

வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம்.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

எமது நீண்டகால குறுகியகால இலக்குகளை ஒன்றோடு ஒன்று முரண்படுத்தி குழப்பிக் கொள்ளாமல், வரையறுத்து பயணிக்க காலம் பணித்துள்ளது. இதனடிப்படையில் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து தமிழ்த் தலைமைகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படுவது எமது இலக்குகளை கட்டம் கட்டமாகவும் நேர்த்தியாகவும் சென்றடைய வழிவகுக்கும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை சம்பந்தமான களநிலை ஆராய்வு மற்றும் கலந்துரையாடலுக்கு இலங்கை வரவுள்ளனர். அரசுடன் நடத்தும் பேச்சுகளுக்கு அப்பால் தமிழர் தரப்போடும் கலந்துரையாடுவதற்கு ஆயத்தமாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. இதை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் அவதானத்தில் எடுத்திருந்தது. அதன் பிரதிபலிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை நீக்கும் வரைக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை அரசுக்கு வழங்குவதை தடைசெய்வதைப் பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளது. இந்த முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. - என்றுள்ளது. (த)

## கொரோனாவால்...

வயோதிபர் ஒருவர் கொரோனாத்தொற்றால் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இரணைப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 80 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் கடந்த 20ஆம் திகதி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நபரும் 22ஆம் திகதி உயிரிழந்துள்ளார். (த-19)

## மீன் வலையில்...

குறித்த மீன், வலையிலிருந்து அகற்றி மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது.

வலைகளுக்கு நடுவே அதிகளவான மீன்கள் வந்த போதிலும் கோமராசி மீனின் வருகையால் மீன்கள் எதுவும் பிடிபடவில்லை. சில நாள்களுக்கு முன்பும் ஒரு கோமராசி மீன் அகப்பட்டிருந்தது. நேற்று இரண்டாவது முறையாகவும் பிடிபட்டுள்ளது. ஆழ்கடலில் வசிக்கும் இந்த வகை மீன்கள் சில நாள்களாக கரைக்கு வந்துசெல்கின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (த-27)

## எரிபொருளை...

ருளைக் கடனாகப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி இந்திய அரசிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார் என்று 'எகனமி நெக்ஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

நிலுவையில் உள்ள எரிபொருள் கொள்வனவுக்கான தொகையைச் செலுத்துவதற்கும் புதிதாக எரிபொருள் கொள்வனவு செய்வதற்குமே இந்தக் கடன் தொகை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு முக்கிய உள்நாட்டு வங்கிகளில் கிட்டத்தட்ட 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களில் கூறப்பட்டுள்ளதைப் போன்று ஈரானிடமிருந்து கடன் கோரப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், "கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளுடன் நாங்கள் கடன்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வோம்" எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து கடன் அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு செய்வது குறித்து பேச்சுகளை முன்னெடுத்துள்ளார்.

கடன் வசதியில் கச்சா எண்ணெயை கொள்வனவு செய்வது தொடர்பில் எமிரேட் நேஷனல் எண்ணெய் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளுடனான பேச்சுகள் சாதகமாக முடிவடைந்துள்ளன எனவும் அமைச்சர் கம்மன்பில சில நாள்களுக்கு முன்னர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (த -22)

## கிணற்றை...

உள்ள கிணறு ஒன்றை சுத்தம் செய்யும் போது குறித்த வெடிபொருள் அவதானிக்கப்பட்டது.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று குறித்த வெடிபொருள் மீட்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-27)

## சிறந்த...

திணைக்களம் அறிவித்துள்ளது.

அவர் மட்டுமன்றி மற்றொரு கைதியும் சிறந்த பெறுபேறு பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பரீட்சைக்கு வட்டரெக்க மற்றும் மகசின் சிறைச்சாலைகளிலிருந்து 4 கைதிகள் தோற்றியிருந்தனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதானத்தில் பழிதீர்ப்போம்!

## தொடரைக் கைவிட்ட நாடுகளுக்கு ரமீஸ் ராஜா கடும் எச்சரிக்கை




இஸ்லாமபாத், செப். 25

பாகிஸ்தானுடனான தொடரைக் கைவிட்ட நாடுகளுக்கு மைதானத்தில் பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தானின் கிரிக்கெட் சபைத் தலைவர் ரமீஸ் ராஜா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நியூசிலாந்து அணியைத் தொடர்ந்து இங்கிலாந்தும் தொடரிலிருந்து விலகியுள்ளமை வருந்தத்தக்கது. ஆனால், இதை நாங்கள் எதிர்பார்த்ததுதான் இருந்தோம். நியூசிலாந்து தொடரிலிருந்து விலகுவதாக சொன்னபோதே, எந்த மாதிரியான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இருந்தன என்பதை எங்களிடம் பகிர்ந்து கொள்ளவில்லை.

இப்போது இங்கிலாந்து, நியூசிலாந்து போல ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியும், பாகிஸ்தானுக்கு வர தயக்கம் காட்டி வருகிறது. அவர்கள் மூவரும் ஒரே மேற்கத்திய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். எங்களை அவர்கள் இன்னும் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. ரி20 உலகக் கிண்ணத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஓர் அணியை மட்டும்தான் நாங்கள் இலக்கு வைத்திருந்தோம். ஆனால் இப்போது அந்தப் பட்டியலில் மேலும் இரு அணிகள் சேர்ந்துள்ளன. அவை நியூசிலாந்தும் இங்கிலாந்தும்தான். அவர்களை நாங்கள் மைதானத்தில் பழி தீர்ப்போம் என்றார்.

ரி20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன. ரமீஸ் ராஜா, 'ரி20 உலகக்கிண்ணத்தைப் பொறுத்தவரை நாங்கள் ஒரு அணியை மட்டும்தான் நாங்கள் இலக்கு வைத்திருந்தோம்' என்று தெரிவித்துள்ளமை இந்திய அணியைப் பற்றியதாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

# அதிகம் சம்பாதிக்கும் வீரராக றொனால்டோ!

லிஸ்பன், செப். 25

அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் வரிசையில் 2021 - 2022 பருவகாலத்தில் மெஸ்ஸியை றொனால்டோ பின்தள்ளியுள்ளார் என்று பிரபல பத்திரிகை செய்தி வெளியிட்டது.

கால்பந்தாட்ட உலகில் முடிசூடா மன்னர்களாக றொனால்டோ, மெஸ்ஸி இருவரும் விளங்கு கின்றனர். கோல்கள், விளம்பரங்கள், விருதுகள் என்று எதற்கெடுத்தாலும் இந்த இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவும். இந்த நிலையில் இந்தப் பருவகாலத்தில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் பட்டியலில் றொனால்டோ மெஸ்ஸியைப் பின்தள்ளியுள் ளார். றொனால்டோ 125 மில்லியன் டொலரையும், மெஸ்ஸி 110 மில்லியன் டொலரையும் இந்தப் பருவகாலத்தில் வருமானமாகப் பெறவுள்ளனர். (ம)

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப்பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

**077 814 7389, 077 614 7333**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)
ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

**076 221 2037, 077 288 0152**
**076 734 1023**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 02 . 1942



மறைவு 23 . 09 . 2021

**கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா**

**ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி வட மாகாணம்**

வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கிழக்கு சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா அவர்கள் நேற்று முன்தினம் (23.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை மங்கையற்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான Dr. கெங்காதரம்பிள்ளை தபோதினி தம்பதியரின் அன்பு மருமகனும், தர்ஷினி, மதனராஜ், சுகிர்தலா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஸ்ரீபரன் வித்யா, பார்திபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிஷிகா, கிரிசன், பூர்விகா, விகான், கிரிஷ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும், தனலட்சுமி, வள்ளிநாயகியம்மா, இராஜகுலேந்திரன், கணேசராசா, அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, Dr. விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2021) சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுக் கிழக்கு,**
**சித்தன்கேணி**

**தகவல் : குடும்பத்தினர்**
**தொ.பே. 021 225 2627**




முன்னணி ஊடகத்துடன் கைகோர்க்க சந்தர்ப்பம்!

- உதவி ஆசிரியர்கள்
- செய்தியாளர்கள்
- ஒப்புநோக்குநர்கள்
- மொழிபெயர்ப்பாளர்

பயிற்சியாளர்களாகவும் விண்ணப்பிக்கலாம்.
ஆங்கிலப் புலமை மேலதிக தகைமை
ஒப்புபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் சுயவிவரக் கோவையை
அனுப்பும் வழிமுறை

தபால்:
உதயன் தலைமை அலுவலகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்:
adminuthayan.com

வட்ஸ்அப்
077 120 9990





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.